விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Srilanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 02 செவ்வாய்க்கிழமை (15.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 027

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# புதிய நீதியரசர் நியமனத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்

## சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு), பிரதம நீதியரசர் பொறுப்பில் வேறு ஒருவரை ஜனாதிபதி நியமித்தால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது. எனவே இலங்கையின் பிரதம நீதியரசர் பொறுப்பில் இருந்து ஷிராணி பண்டாரநாயக்கவை ங்கிவிட்டு புதிதாக ஒருவரை அப் பதவியில் நியமிக்கும் முயற்சிகளை நாட்டின் ஜனாதிபதி கைவிட வேண்டும் என்று அச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வெறிச்சோடியது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்பிற்கு உட்பட்டிருந்த உயர்நீதிமன்ற வளாகம் நேற்று திங்கட்கிழமை வெறிச்சோடி காணப்பட்டது.

அது மட்டுமன்றி விஜேராம மாவத்தையில் உள்ள பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவின் (02ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் பதவிக்கு வெற்றிடம்

அரசியலமைப்பிற்கு அமைவாக பிரதம நீதியரசர் பதவி வெற்றிடமாகக் காணப்படு கிறது என ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பின்படி குற்றவியல் பிரேரணை தொடர்பான செயற்பாடுகளை பாரா ளுமன்றம் பூர்த்தி (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய செயலர் ஏமாற்றம்


கமலேஷ் சர்மா

இலங்கையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளையிட்டு தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுநலவாய முன் முயற்சி கள் மற்றும் ஏற்கெனவே திட்டமிட்டது தொடர் பில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி பொதுநலவாயத்தின் மதிப்புகள், கோட்பாடுகள், அரசியலமைப்பு மீறல்கள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பு அறிவுறுத்தியிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய (20ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதம நீதியரசரை நியமிக்க நாடாளுமன்ற கவுன்சில் இன்று கூடும்

(கொழும்பு)


பிரதம நீதிபதி பொறுப்புக்கு வரக்கூடிய வராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பரிந்துரை செய்கின்றவரின் பெயர் நாடாளுமன்ற கவுன் சிலால் இன்று செவ்வாயன்று பரிசீலிக்கப்பட வுள்ளது என்று இக் கவுன்சிலின் உறுப்பி னரான ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதம நீதியரசரை தேர்வு செய் வதற்காக நாடாளுமன்றக் கவுன்சில் இன்று செவ்வாயன்று கூடவிருக்கிறது என்று அஸ் வர் கூறினார்.

ஐந்து பேர் கொண்ட இந்த நாடாளுமன்ற கவுன்சிலுக்கு நாடாளுமன்றத்தில் சபாநாய கர் தலைவராக அமைந்துள்ளார்.

நாட்டின் பிரதம அமைச்சர் திமு ஜயரட்ண, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர், எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.சுவாமி நாதன் ஆகியோர் இந்த கவுன்சிலில் இடம் பெற்றுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ்?



இலங்கையின் 44-வது பிரதம நீதியரசராக முன்னாள் சட்டமா அதிபரான மொஹான் பீரிஸ் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள் ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான கடிதம் ஜனாதிபதியினால் கையொப்ப மிட்டு அவருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ள நிலையில் அடுத்த பிரதம நீதியரசர் யார் என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த நிலையில், அடுத்த பிரதம (19ஆம் பக்கம் பார்க்க)

## பதவி விலகத் தயாரில்லை! பொலிஸ் பாதுகாப்பு தேவை

### பிரதம நீதியரசர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாய க்க, தனது பதவி விலகல் கடிதம் கிடைக்க பெற்றபோதும் அப்பதவியில் இருந்து விலகு வதற்கு தயாரில்லை என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஷிராணி பண்டாரநாயக்கவே தற்போதும் பிரதம நீதியரசர் என்ற வகையில் அவர் தனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்து மாறு சட்டரீதியாக பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

தன் மீதான குற்றப்பிரேரணை மற்றும் பதவி நீக்கம் செய்யப்பட்டமை சட்டவிரோத மானது என சர்வதேச ரீதியான கண்டனங்கள் எழுந்துள்ள நிலையில் அவர் பதவி விலகலை ஏற்றுக்கொள்ள (20ஆம் பக்கம் பார்க்க)


நாளைய வலம்புரியுடன்
வர்ண நாட்காட்டி
பத்திரிகை முகவரிடம் கேட்டு வாங்குங்கள்


## நீதித்துறை நெருக்கடியை தீர்க்க அரசைக் கவிழ்ப்பதே ஒரேவழி!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நீதித்துறை தொடர்பான தற் போதைய நெருக்கடியை தீர்ப்பதற் காக இருக்கின்ற ஒரேயொரு வழி இந்த அரசாங்கத்தை கவிழ்பதே யாகும்.

அதற்காக உங்கள் தலைமை யை வழங்குங்கள் என்று சட்டத் தரணிகளிடம் எதிர்க் கட்சித் தலை வரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலை வருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய சட்டத்தரணிகள் சங்கத் தின் உறுப்பினர்களுடனான சந் திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பு கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.



அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

அரசாங்கத்தை ஆரம்பத்திலி ருந்தே ஆதரித்து வந்த உள்நாட்டு பத்திரிகைகளும் நீதித்துறை விவ காரத்திற்கு பொறுப்புக்கூற வேண் டும். நீதித்துறை நெருக்கடி பற்றி ஒரு பத்திரிகை (02ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் ஜீப் மோதி ஒருவர் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

பரந்தன் சந்திக்கும் கரடிப்போக் குச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் [illegible] இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி பொது மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலிண்டர் வெடித்து இருவர் படுகாயம்

(குருமண்காடு)

காஸ் சிலிண்டர் வெடித்ததில் கணவனும், மனைவியும் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா சமணங்குளப் பகுதியில் நேற்று மதியம் உணவு சமைப்பதற்காக காஸ் சிலிண்டரை பற்ற வைத்தபோது அதிக காஸ் வெளியேறியதனால் அது வெடித்ததில் கணவன், மனைவி ஆகிய இருவரும் எரியுண்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

சமணங்குளத்தைச் சேர்ந்த ஸ்ராலின் (வயது -50) மற்றும் அவரது மனைவி ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (எ-250)

# தமிழ் பகுதி பிரதேச செயலகங்களை துண்டாடுவதற்கு அரசு முயற்சி!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளைத் துண்டாட முயலும் செயற்பாட்டிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் முழு எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன், இது குறித்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றது என த.தே.கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பல கிராமங்கள் கோரளைப்பற்று மத்தி மற்றும் கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் இணைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் முழு எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன் இது தொடர்பிலான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளையும் நடத்தி வருகிறது என அவர் தெரிவித்தார்.

கோரளைப்பற்று தெற்கு-கிரான் மற்றும் கோரளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகள் கோரளைப்பற்று மத்தி மற்றும் கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலகங்களுடன் இணைப்பது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற எல்லை நிர்ணய கூட்டத்தில் அறிவிக்கப்பட்டமை தொடர்பில் கண்டனம் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணானை கிழக்கு எனும் 211பி கிராம சேவையாளர் பிரிவின் ரிதிதென்ன, ஜயந்தியாய, ஓமடியாமடு, பாலம்பக்கேணி, ஆலங்குளம், புவனேசபுரம், மேலாண்டகுளம் ஆகியன கோரளைப்பற்று மத்தியுடன் இணைக்கப்படுகிறது. இது சுமார் 12 ஆயிரத்து 500க்கும் அதிகமான ஏக்கராகும்.

அதேபோன்று, கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி எனும் 610 குடும்பங்களைக் கொண்ட 210-ம் இலக்க கிராம சேவையாளர் பிரிவின் குளத்துமடு, குடாமுனைக்கல், குளவால்சேனை, பெட்டைக்குளம், புணானை மேற்கு 240 குடும்பங்களைக் கொண்ட 210 ஈ கிராம சேவையாளர் பிரிவின் புணானை, மயிலந்தனை, சாளம்பச்சேனை, முள்ளிவட்டவான், புணானை அணைக்கட்டு ஆகிய கிராமங்கள் கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுடனும் இணைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்ப்பதுடன், இது தொடர்பில் ஆலோசனைகளை நடத்தி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளோம். அத்துடன் இந்த இணைப்பு நடவடிக்கை உடனடியாக கைவிடப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மக்களது பிரதேசங்கள் முஸ்லிம் மக்களது பிரிவுகளுடன் இணைந்திருப்பதற்கு தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள். மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் திட்டமிட்ட செயற்பாடாக இது அமைந்திருக்கிறது. அந்த வகையில் இத்திட்டத்திற்கு யாரும் விலை போய்விடக்கூடாது எனவும் தெரிவித்தார். (எ-11)

## உலகத் தமிழர் இயக்கத்தின் மீதான தடையை கனடா நீடித்தது

(ஒட்டவா)

கடந்த 2008-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி கனேடிய அரசால் தடை செய்யப்பட்ட உலகத் தமிழர் இயக்கத்தின் மீதான தடை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பரிசீலணைக்கு எடுக்கப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் 2010-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் திகதி ஆராயப்பட்ட இத்தடை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டு 2012-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் திகதி மீண்டும் கனடாவின் பாதுகாப்பு உயர்பீடத்தால் மீளாய்வுக்கு எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தத் தடையுத்தரவு குறிப்பிட்ட திகதிக்கு முன்னரேயே நவம்பர் 20-ம் திகதி பரிசீலிக்கப்பட்டு இத்தடையுத்தரவு விவகாரம் மீண்டும் மீளாய்வுக்கான திகதி குறிப்பிடப் பாடமல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் இத்தடையுத்தரவு மீண்டும் 2014-ல் மீளாய்வுக்கு வராமலே தடையுத்தரவு தொடரும் சாத்தியத்தைத் தெரிவித்துள்ளது. (எ-11)

## புனர்வாழ்வு அமைச்சர் கஜதீர நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம்

### உதவி பொருட்களும் வழங்கி வைப்பு

(முல்லைத்தீவு)

புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறீ கஜதீர நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு சென்ற அமைச்சர் அப்பகுதி மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்கி வைத்ததுடன் மக்களை நேரில் சந்தித்தும் கலந்துரையாடினார்.

இவ்விஜயத்தின் போது புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமைச்சரின் விஜயத்தின் போது கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தினைச் சேர்ந்த 165 குடும்பங்களுக்கும் தலா ஐந்து தென்னங் கன்றுகளும், முற்கம்பிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் தென் மாகாண சபையின் பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கேப்பாப்பிலவு அ.த.க. பாடசாலைக்கு ஒரு கோடி நிதிஉதவியும் வழங்கப்படும் எனவும் உறுதிமொழியளித்தார்.

மேலும் முல்லைத்தீவு கரைத்துறைப் பற்று பிரதேசத்திற்கு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர், போரினால் பாதிக்கப்பட்ட 61 அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 61 பேருக்கு நிதி உதவிகளையும் வழங்கி வைத்தார். (எ-256)

## புதிய பிரதம நீதி...

அரசியல் யாப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின் பிரகரரம் இந்த நாடாளுமன்ற கவுன்சில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தலைமை நீதியரசர் பொறுப்பில் நியமிக்கப்படுவதற்காக ஜனாதிபதி ஒரு பெயரை சிபாரிசு செய்து தங்களுக்கு அனுப்புவார் என்றும் அதனைத் தாங்கள் பரிசீலித்து புதிய பிரதம நீதியரசரை நியமிக்க ஒப்புதல் வழங்க வேண்டும் என்று அஸ்வர் சுட்டிக் காட்டினார்.

மூன்று பேரின் பெயர்கள் அனுப்பப்பட்டதாக வெளிவந்த ஊடகச்செய்திகள் சரியான தகவல்கள் அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தக்கவுன்சில் கூடும்போது எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்றாலும் ஏனையோர் சேர்ந்து சிபாரிசுக்குரியவருக்கு ஒப்புதல் வழங்கமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

ஊடகங்களில் தெரிவிக்கப்படுவது போல மொஹான் பீரிஸின் பெயர் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று கூறுவ[illegible]கில்லையாயினும் ஜனாதிபதி சிபாரிசு செ[illegible]யக் கூடியவராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் இருக்கவும் வாய்ப்புண்டு என்று அஸ்வர் தெரிவித்தார். (எ -11)

பிள்ளையார் இன்
40% கழிவு
இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(6-1976)

## நீதித்துறை...

யேனும் ஆசிரியர் தலையங்கத்தை தீட்டவில்லை. சிங்களப் பத்திரிகை ஒன்று ஆசிரியர்கள் நியமனம் தொடர்பில் ஆசிரியர் தலையங்கத்தை எழுதியிருந்தது.

ஆசிரியர் நியமனத்தில் காணப்படும் பிரச்சினையா, நாட்டின் தற்போது இருக்கின்ற பெரும் பிரச்சினை? தனது இந்த குற்றச்சாட்டுகளுக்கு பத்திரிகை ஆசிரியர் சங்கத் தலைவரும் சகல புதினப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் பதிளிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பது தமது குற்றச்சாட்டை ஏற்பதாகும். பத்திரிகை ஆசிரியர்கள் ஜனாதிபதியையும் பாதுகாப்புச் செயலாளரையும் எத்தனை முறை சந்தித்தனர் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றார். (எ -11)

## வெறிச்சோடியது...

உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இருக்கின்ற பகுதிகளிலும் வெறிச்சோடிக் கிடந்தது. அந்தப் பகுதிகளில் பாதுகாப்புச் தரப்பைச் சேர்ந்த ஒரு வரைக்கூட காணாக் கிடைக்கவில்லை .

பிரதம நீதியரசரை நீக்குவது தொடர்பான ஜனாதிபதியின் உத்தரவு கிடைக்கப்பெற்ற பின்னரே இந்தநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (எ -11)


## பொதுக் கூட்ட அழைப்பு

வருடாந்த பொதுக்கூட்டம் வரும் 20.01.2013-ம் திகதி, ஞாயிறு பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களின் சுதந்திரக் கட்சி கிளை அலுவலக மண்டபத்தில் தலைவர் திரு.த.ஜெகதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

இப்பொதுக்கூட்டத்தில் தங்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: தங்களது பேருந்தின் வழியனுமதியின் போட்டோ பிரதியுடன் சமுகம் தரவும்.

நிகழ்வுகள்

01.இறைவணக்கம்
02.தலைவர் உரை(வரவேற்புரை)
03.பிரதம விருந்தினர் உரை
04.செயலாளர் அறிக்கை
05.பொருளாளர் அறிக்கை
06.மதியபோசன இடைவேளை
07.புதிய நிர்வாகத் தெரிவு
08.புதிய தலைவர் உரை
09.ஏனைய விடயங்கள்
10.புதிய செயலாளர் நன்றியுரை
11.நிறைவு

க.ஜமுனாதரன்
செயலாளர்.

தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்)
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
கிளிநொச்சி மாவட்டம்.

(1486)






SAHANA
Security &Investigation(Pvt) Limited

பாதுகாப்பு சேவை வெற்றிடம்
வட மாகாணம்
மேற்படி சேவைக்கான ஆளணி வெற்றிடம்

மேற்படி சேவையில் இணைந்துகொள்ள விரும்புவோர் தகைமைகள்:

1.உடற்தகுதி:
சுகதேகியாகவும் மார்பளவு (34")
உயரம்: 5 அடி 8 அங்குலம்
வயது எல்லை: 21-27

2.கல்வி:
க.பொ.த. சா/த குறைந்தது 5 பாடம் சித்தி

3.நற்சான்றிதழ்:
கிராம சேவையாளர் / சமாதான நீதவான்

4.ஏனைய சான்றிதழ்கள்:
அடையாள அட்டை நிழற்பிரதி
கல்வி சான்றிதழ்கள்
விளையாட்டு சான்றிதழ்கள்
ஏனையவை

5. நிரந்தர முகவரி

6.அரசாங்க சேவையாற்றும் இரு அதிகாரிகளின் நற்சான்றிதழ்

7.22ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் கிடைக்கக் கூடியவாறு தங்கள் சுயவிபரக் கோவை விண்ணப்பங்கள் சான்றிதழ்கள் நிழற்படபிரதியுடன்(கடவுச்சீட்டு அளவு) நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

பாதுகாப்பு சேவை விண்ணப்பம்

விளம்பர இலக்கம்-1496
வலம்புரி நாளிதழ் காரியாலயம்
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(1425)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குழந்தையிடம் பேசுவது எப்படி?

"என் குழந்தை நான் சொல்வதைக் கேட்பதில்லை" என்றால் அதற்கு உங்களுக்கு சரியாகச் சொல்லத் தெரியாது என்று அர்த்தம்.

அதற்காகக் குழந்தையைக் குறை கூறாதீர்கள். ஒரு குழந்தை நல்ல விதமாக வளர்வது உங்கள் கையிலே தான் உள்ளது.

குழந்தை நிபுணர்கள் இது தொடர்பாக என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

குழந்தைகளிடம் எப்படி கதைக்க வேண்டுமென்பதைத் தவிர, எப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதை முதலிலே தெரிந்து வைத்துக் கொள்ள் வேண்டும் என்று கூறுகிறார்கள்.

"சரி, அதை எங்களுக்கும் சற்றுச் சொல்லிக் கொடுங்கள்... நாங்களும் அதன் பிரகாரம் நடந்து கொள்ளலாம்" என்று சொல்கிறார்கள்.

அப்படியென்றால் நாம் கூறுவதை சற்று காதிலே வாங்கிக் கொள்ளுங்கள்.

முதலிலே உங்கள் குழந்தையை இன்னொரு குழந்தையோடு Compare செய்யுங்கள். கூடப்பிறந்த குழந்தைகளோடு கூட ஒப்பிட்டுப் பேசக்கூடாது.

"உன் சகோதரியைப் பார்... அவள் எவ்வளவு நன்றாகப் படிக்கிறாள்? கணக்கிலே 100 இற்கு 100 புள்ளிகளைப் பெற்று வருகிறாள். நீயோ 100 இற்கு 20 புள்ளிகளைத்தான் பெறுகிறாய்-- இவ்வாறு ஒப்பிட்டுப் பேசுவது மகா தவறு. இதனால் உங்கள் பிள்ளைக்கு ரோசம் வந்து படிக்க ஆரம்பித்து விடும் என்று நினைக்காதீர்கள். ஆனால், பிள்ளைக்கு படிக்க வேண்டும் என்ற ரோசம் வராது. தனது சகோதரி மீதுதான் கோபம் வரும். தனது சகோதரியை வெறுக்க ஆரம்பிப்பார்.

ஒரு 7 வயது பையனை ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு சென்ற போது, அங்கே அவன் 4 வயது சிறுவன் மாதிரி விளையாட ஆரம்பிக்கிறான். நீங்கள் உடனே "வயதிற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும்; என்ன சிறிய குழந்தை மாதிரி" என்று அதட்டக்கூடாது. அதன்பின் அவன் நான்கு வயது குழந்தை மாதிரி நடக்க ஆரம்பித்து விடுவான். அவனிடம் நாசூக்கா "தம்பி! விரைவாக சாப்பிட்டாயென்றால் வீட்டிற்குப் போய் தொலைக்காட்சியில் நல்ல நாடகம் பார்க்கலாம்" என்று ஏதாவது சொல்ல வேண்டும்.

ஒரு குழந்தையைப் பார்த்து நீ சோம்பேறி என்றோ அல்லது மகா புத்திசாலியென்றோ முத்திரை குத்தக்கூடாது. அவன் அப்படியே நினைக்க ஆரம்பித்து விடுவான்.

"நீ மகா புத்திசாலி! இந்தப் பரீட்சை உனக்கு இலகுவாகத் தான் இருக்கும்... ஊதித் தள்ளி விடுவாய்" என்று சொல்வதை விட, "நீ நன்றாக படித்துள்ளாய்... நல்லவிதமாக எழுதி விடுவாய் என்று எனக்குத் தெரியும்" என்று சொல்லலாம்.

"என்னை சற்று தனியாக இருக்க விடு!" என்று உங்கள் குழந்தையைப் பார்த்து கத்தாதீர்கள். குழந்தை தனக்கு யாரும் ஆதரவாக இல்லையேயென்று நினைக்க ஆரம்பித்து விடும். அதை விடுத்து;

"இதோ பார்! உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். இப்போது எனக்கு வேலை இருக்கிறது" என்று சொல்லலாம்.

அதன்பின் அப்பாவிடமோ அல்லது அம்மாவிடமோ வரலாமென பிள்ளை புரிந்து கொள்ளும்.

குழந்தையைப் பார்த்து "வாயை மூடு" (Shut up) என்ற கெட்ட வார்த்தையை கூறக்கூடாது.

தன் கருத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லையென்று குழந்தை நினைத்து விடும்.

இவையெல்லாம் குழந்தைகள் தொடர்பாக நிபுணர்கள் சொல்லியிருக்கும் யோசனைகள்.

அதனாலே ஒரு குழந்தை எதிர்காலத்தில் நற்பிரஜையாக வர வேண்டுமென்றால், அது பெற்றோர் கையில்தான் உள்ளது.

ஒரு தந்தை சிறிய பையனை அடித்துக் கொண்டிருந்தார். "ஏன் அடிக்கிறீர்கள்?" என்று தாயார் கேட்டார்.

"பரீட்சையிலே எருமைக்கும் பசுவுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக்கூட பதில் எழுதத் தெரியாது இவன் இருந்துள்ளான்" என்றார் தந்தை.

"சரி, அவனுக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. உங்களுக்கு இன்னொரு வித்தியாசம் புரியவில்லையே" என்றார் தாயார்.

"என்ன சொல்கிறாய்" என்றார்.

"இது நமது பையன் இல்லை... அயல் வீட்டு பையன்" என்றார் தாயார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சிறுவர் உரிமைகளை சவுதி அரசு மீறியுள்ளது

## நோர்வே கண்டனம்



(கொழும்பு)

இலங்கை பணிப்பெண் ரிஸானா நபீக் சிரச்சேதம் செய்யப்பட்டமை தொடர்பில் நோர்வே தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எக்ஸ்பன் பார்த் எயிட் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு, அதில் இந்த செய்தியைதாம் கேள்வியுற்றதும் ஒரு கணம் அதிர்ந்து போனதாக குறிப்பிட்டுள்ளார்.

ரிஸானாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை சவுதி அரேபிய அரசாங்கத்தினால் சிறுவர்களின் உரிமைகளை முழுமையாக மீறும் நடவடிக்கையாக அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சவுதி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற மரண தண்டனை தொடர்பில் நோர்வே அரசாங்கம் தெளிவற்ற நிலையில் உள்ளதுடன் 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதை தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# பொங்கல் விழாவுக்கு இராணுவத்தளபதி வருகை

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவிலுள்ள போர் வெற்றி நினைவு தூபிக்கு அருகில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு மூன்று தமிழ்க்குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கான தைப்பொங்கல் பரிசினை இராணுவத் தளபதி லெப்டினல்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய நேற்று வழங்கினார்.

இராணுவத்தினரின் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று ஆனையிறவில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக இலங்கை இராணுவத்தளபதி கலந்து கொண்டார். அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் மகனுமான நாமல் ராஜபக்ஷ, யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். இதன்போது ஆனையிறவில் அமைக்கப்பட்ட போர் வெற்றி நினைவு தூபிக்கு அருகில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு மூன்று குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

இந்தக் குடியிருப்புக்கு சென்ற இராணுவத்தளபதி அங்கு குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தைப்பொங்கல் பரிசினை வழங்கியதோடு குடும்பத்தினருடனும் கலந்துரையாடினர். இதே வேளை, இராணுவத்தளதியின் வருகையை முன்னிட்டு ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததோடு வீதியில் சென்ற வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ், சிங்கள கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்வுகளும் கிராமிய நிகழ்வுகளும் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 240 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 160 | 200 |
| தக்காளி | 90 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 80 | 80 |
| கரட் | 80 | 140 | 140 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 60-80 | 90 | 80 |
| பாகற்காய் | 170 | 240 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 240 | 160 |
| லீக்ஸ் | 110 | 140 | 140 |
| பீற்றூட் | 80 | 150 | 100 |
| கறிமிளகாய் | 220 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 500 | -- | -- |
| போஞ்சி | 140 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 160 | 130 |
| [illegible] | 240 | 60 | 100 |

# இராசி பலன்

15.01.2013

(தை 02, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.25 மணிவரை
சதயம் முன்னிரவு 9.22 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை
சதுர்த்தி விரதம், பட்டிப்பொங்கல்

**மேடம்** நீங்கள் எதிர்பார்த்த வகையில் முக்கிய பிரமுகர் ஒருவர் தொடர்பு கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, எதிர்காலம் சிறப்பாக அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அந்நியர்கள் உதவியுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** ஆன்றோர் சந்திப்புண்டு, உடல் உழைப்பில் ஈடுபாடு காட்டுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறைந்திருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், போசன சுகமுண்டு, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**சிங்கம்** குடும்பத்தில் பெரியவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும், போசன நன்மையுண்டு.

**கன்னி** கூட்டு முயற்சியில் வெற்றிகாண்பீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**துலாம்** மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சி கூடும், சுப காரியப்பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** செல்வ வளம் பெருக கணபதியை வழிபட வேண்டிய நாள், வருவிலை நலன்கருதி எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தவறியதாக கருதிய பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், பண வரவு திருப்தி தரும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், உறவினர் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், சற்று காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், தூர தேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையற்றதோர் இலங்கை தென்மராட்சியில் கருத்தரங்கு


வறுமைற்றதோர் இலங்கை தேசம் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிகழ்வுகளும் கருத்தரங்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் முன்றலில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலா சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வுகளில் பிரதேசத்தைச் சேர்ந்த துறைசார் நிறுவனங்களினால் நிகழ்வுகள் நடத் தப்படவுள்ளன.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் தொழில், வங்கி போன்றவற்றில் பணியாற்று வோரின் பங்குபற்றலுடன் பிரதேசத்தில் உள்ள சகல திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறு வனங்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதி கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள னர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வரவு செலவுத்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட வறுமை அற்றதோர் இலங்கை எனும் நிகழ் வினை இன்று செவ்வாய்க்கிழமை தொட க்கம் ஒரு வாரத்திற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் நடத் துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரு கின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங் களை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத் திறன் மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற் கான அறிமுக விழாவாக இந்நிகழ்வு நடத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)



நன்றி: ஐலன்ட்

## சிறுவர்களுக்கான கள சுற்றுலா பயணம்

(ஆனைக்கோட்டை)

விழுது நிறுவனத்தினால் மாதகல், சகா யபுரம் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கான கள சுற்றுலாப் பயணம் ஒன்று கடந்த 12 ஆம் திகதி இராஜலிங்கம்- லக்சன் தலை மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களைப் பாது காப்பதற்கும் ஒற்றுமையுடன் சிறுவர் களை வாழ வைப்பதற்குமே இக் கள சுற்று லாப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-18)

# தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் இன்று செவ் வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நுளம்பு ஒழிப்பு வாரம் விசேடமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வேல்ட் விஷன் நிறுவன அனுசரணை யுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் மேற்படி திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

அந்தந்த பகுதி கிராம அலுவலர்கள், சமு ர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்ட தாரி பயிலுநர்கள், உள்ளூராட்சி சபையினர், பொலிஸார், சுகாதார தொண்டர்கள் மற்றும் பொது அமைப்பினரை இவ்விழிப்புணர்வு பிரசாரத்திலும் பரிசோதனையிலும் ஈடுபடு த்துவதென தென்மராட்சி பிரதேச செயலகத் தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட விசேட டெங்கு ஒழிப்பு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதில் டெங்கு ஒழிப்பு வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள பொது சுகாதார பரி சோதகர் பிரிவுகளும் விபரங்களும் வருமாறு,

இன்று செவ்வாய்க்கிழமை மட்டுவில், சர சாலை, மந்துவில், நாளை புதன்கிழமை கொடிகாமப் பிரதேசம், நாளை மறுதினம் வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் பிரதேசம், எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபை இலக்கம் 1, எதிர் வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச் சேரி நகர சபை இலக்கம் 2, எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரணி பிரதே சம், எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை கைதடி பிரதேசம், எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழ க்கிழமை நாவற்குழி பிரதேசம் ஆகிய இடங்க ளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-3-29)




# கனமழை காரணமாக வீதிகளும் சேதமடைந்தன

(நெல்லியடி)

வடமராட்சி பகுதியில் அண்மையில் பெய்த கனமழையை அடுத்து வீதிகள் பலவும் பெரும் சேதமடைந்துள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபி விருத்தி திணைக்களம் மற்றும் பிரதேச சபை கள், நகரசபையினது வீதிகள் பலவும் போக் குவரத்துக்கள் செய்ய முடியாத அளவுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ் வீதிகள் ஊடாக பயணிப்போர் விபத் துக்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதா கவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, சம்பந் தப்பட்ட அதிகாரிகள் குறித்த வீதிகளை புனர மைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (அ-3-10)

# மிருசுவிலை அண்மித்த பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(மிருசுவில்)

மிருசுவிலை அண்மித்த பகுதியில் அண் மைக்காலமாக கடைகள் உடைத்து திருடப் படும் சம்பவங்கள் தொடர்கதையாகவுள்ளன.

மிருசுவில் உசன் பகுதியில் நேற்று முன் தினமிரவு ரயர் விற்பனை நிலையம் ஒன்றில் பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் 2 1/2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இவ்வணிக நிலையம் அண்மையிலேயே புதிதாக திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலி சார் விசாரணைகளை மேற்கொண்டு வருகி ன்றனர்.

மேலும் சில தினங்களுக்கு முன்னர் வட க்கு மிருசுவில் சந்தியிலுள்ள பல்பொருள் வணிக கடையொன்று உடைக்கப்பட்டு அங் கிருந்த மீள்நிரப்பு அட்டை, சிகரெட் வகைகள் என சுமார் 2 இலட்சம் ரூபா மதிப்புள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளன.


மேலும் மிருசுவில் சந்தியில் உள்ள பல் பொருள் வாணிபம் ஒன்றும் அரைகுறையாக உடைக்கப்பட்ட நிலையில் திருட்டு முயற்சி கை விடப்பட்டுள்ளது. அருகில் இராணுவ முகாம் இருந்தமையினாலேயே இத்திருட்டு முயற்சி கைவிடப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இச்சம்பவங்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-85)

## ஆஞ்சநேயர் உற்சவம்

(கோண்டாவில்)

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் ஆஞ்சநேயர் உற்சவ மும் சுவாமிமார்கள் மாலை கழற்றும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-5)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய Top 20 விருது வழங்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி மகரகம தேவி இளைஞர் சேவைகள் மன்ற அரங்கில் நடைபெற்றது. இதில் சிறந்த எழுத்தாளருக்கான விருது நெடுந்தீவு முகிலனுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது வழங்கும் நிகழ்வில் 20 விருதுகள் வழங்கப்பட்டதுடன் எழுத்தாளர் விருது மாத்திரமே தமிழ் இளைஞருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வறுமையற்றதோர் இலங்கை தேசம் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வறுமையற்றதோர் இலங்கை எனும் விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேச செய லக பிரிவு மட்டத்தில் நடத்தப்படும் அறி வூட்டும் ஒருநாள் கருத்தரங்கு நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்பு தலைவர் பாரா ளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெ ன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் மதத்தலைவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், விவசாய சம்மே ளனங்கள், சனசமூக நிலையங்கள் மற் றும் விளையாட்டுக்கழகங்கள் என்பவற் றின் பிரதிநிதிகளை தவறாது கலந்து சிறப் பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட் டுள்ளார். (அ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வறுமையற்றதோர் இலங்கைத் தேசத்திற்காக எனும் தலைப்பிலான ஒரு நாள் கருத் தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெனின் தலைமையில் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## உயிர்வாழ் சான்றிதழ் விபரங்கள் கோரப்படுகின்றன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரி வில் ஓய்வூதியம் பெறுவோரின் உயிர்வாழ் சான்றிதழ் பற்றிய விபரங்கள் கோரப்பட்டு ள்ளது.

இதற்கான படிவங்களும் சகல ஓய் வூதியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. அப்படிவத்தில் ஓய்வூதியரின் பெயர், ஓய்வூதிய கொடுப்பனவு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, ஓய்வூ தியம் பெறும் வங்கி, வங்கிக் கணக்கு இலக் கம், கிராம அலுவலர் பிரிவு போன்ற விட யங்கள் கோரப்பட்டுள்ளன. (அ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரசபை கழிவுகளை கொட்ட இடப்பற்றாக்குறை நிலவுகிறது

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(கொழும்பு)

மன்னார் சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுகளை அகற்றி கொட்டுவதற்கான இடம் தற்போது பற்றாக்குறையான நிலையில் இருப்பதாகவும் இதனால் மன்னார் நகர சபையினால் தற்போது கழிவுகளை துரித கதியில் அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மன்னார் நகரசபை உறுப்பினர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்த கடும் மழையின் காரணமாக மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்களினால் கழிவுகளை அகற்ற முடியாத நிலை காணப்பட்டதோடு தாமதமும் ஏற்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் மன்னார் நகர சபையினால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் தனியார் ஒருவருடைய காணியில் தாழ்வான பகுதியில் கொட்டப்பட்டு மண் அகழப்பட்டு வந்தது.

தற்போது குறித்த தனியார் காணியில் மண் அகழ்வுக்கு மன்னார் பிரதேச செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை ஒரு இடத்தில் கொட்ட இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் உட்பட சபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல் ஆகியோருடன் குறித்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பிரச்சினை மன்னார் பிரதேச செயலாளரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. இந்த நிலையில் கழிவுகளை சேகரிப்பதற்காக 5 ஏக்கர் அரச காணி மன்னார் நகர சபைக்கு வழங்குவதற்காக மன்னார் பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. சுத்திகரிப்பு பணியாளர்கள் கழிவுகளை வீதிகளிலும் வேறு இடங்களிலும் கொட்டியுள்ளனர். இதனால் மன்னார் நகர சபைக்கும் மக்களுக்கிடையிலும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தற்போது மழை பெய்து கொண்டிருப்பதனால் மக்கள் சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு உடனடியாக இவ்விடயத்தில் குப்பைகளை கொட்டுவதற்கான இடம் ஒன்றை ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்கவேண்டும். (அ-2)

## முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் தமது முச்சக்கரவண்டிகளின் பதிவினை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச முச்சக்கரவண்டி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

இவை தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0217917313 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

# 71458 படையினர் இடை விலகலாம்

## கொழும்பு ஆங்கில நாளேடு தகவல்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் இலங்கை இராணுவத்தை விட்டு 71 ஆயிரத்து 458 பேர் சட்ட விரோதமாக இடை விலகியுள்ளதாக இராணுவத்தரப்பை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பணிக்குத் திரும்பத் தவறிய இலங்கைப் படையினரின் எண்ணிக்கையே 71 ஆயிரத்து 458 பேராகும்.

இவர்களில் 33 ஆயிரத்து 532 பேர் இராணுவ நடைமுறைகளின் கீழ் இலங்கை இராணுவத்தை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ள இலங்கை இராணுவத்தைத் தேடிப்பிடித்துக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார். (அ-2)

# ரிஸானாவின் பெற்றோரை சந்தித்தது கிழக்கு எதிர்க்கட்சி

சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிஸானா நபீக்கின் பெற்றோரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் குழு சந்தித்து அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சிதண்டாயுதபாணி மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கு.நாகேஸ்வரன், ஜெ.ஜெனார்த்தனன் ஆகியோர் மூதூரில் ரிஸானாவின் பெற்றோரைச் சந்தித்து தங்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டனர்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் க.துரைரெட்ணசிங்கம் மூதூருக்கு சென்று ரிஸானாவின் பெற்றோரைச் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார். (அ-2)

# கட்டையாப்பு வீதியை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட குடமியன் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கட்டையாப்பு வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

கொடிகாமம் நகரை நோக்கி செல்லும் குடமியன், நாவற்காடு, மிருசுவில் வடக்கு பகுதி மக்களது முக்கியமான போக்குவரத்து பாதையாக இவ்வீதி காணப்படுகின்றது.

இவ்வீதியினை 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றனர். இப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்களைகொடிகாமம் சந்தைக்கு எடுத்துச் செல்ல இவ்வீதியை பயன்படுகின்றது. இவ்வீதியானது கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத காரணத்தினால் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

மழைகாலங்களில் இவ்வீதியில் பல இடங்களில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து வீதியினை திருத்தி தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
24
2013 January- 2013 June
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
(சி/2122) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>உயரம்: 5'8"<br>கி.பா: 13.75<br>தொழில்: BBA CIMA BBM UK work permit<br>தொ.இ: B -966 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 44.25<br>தகைமை:O/L<br>தொ.இ: G -992 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'8"<br>கி.பா:27.5, 4 இல் செவ்<br>தகைமை:A/L (கணனி நிலையம்)<br>தொ.இ: B -969 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 15.75<br>தகைமை: BSc (BIT) கணனி நிர்வாகத்தர்<br>தொ.இ: G-998 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>உயரம்: 5'11"<br>கி.பா: -26<br>தகைமை: B.Sc (Hons) Quantity survier<br>தொ.இ: B -982 | பிறப்பு: 1987இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:பூசம் 2<br>உயரம்: 5'1"<br>கி.பா:33.25<br>தகைமை: BA<br>தொ.இ: G -1002 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5'8"<br>கி.பா: 33, 7 இல் செவ்<br>தகைமை: Quantity survier அவுஸ்திரேலிய PR<br>தொ.இ: B -983 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 52, 4 இல் செவ்.<br>தகைமை: A/L GAQ சுகாதார திணைக்களம்<br>தொ.இ: G -1005 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுவாய்க்கால் நீரினால் நுளம்புகள் பெருக்கெடுக்காதா?

## நடவடிக்கை எடுப்பது யார்? மக்கள் கேள்வி



(யாழ்ப்பாணம்)

நுளம்புகளின் பெருக்கத்திற்கு பொது இடங்களில் நிலவும் சுகாதார சீர்கேடும் ஒரு முதற் காரணி. எனவே அதிகாரிகள் இவ்வாறான இடங்களினை இனங்கண்டு முதலில் அதனை தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர்.

கண்முன்னே காணப்படும் பெரும் சூழல் மாசடைவினை கண்டும் காணாதது போல் விட்டுவிட்டு வீடுகளின் கோடிப்புறத்தில் காணப்படும் இளநீர்க்கோம்பைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியில் நல்லூர் பிரதேசசபை முதலிடம் வகிக்கின்றது. யாழ். மாநகரசபை இரண்டாம் இடம் வகிக்கின்றது.

இவ்விரு பிரதேசங்களுமே அதிகளவிலான டெங்கு நோயாளர்களினை தன்னகத்தே வைத்துள்ளது என்ற பெருமை கொண்டுள்ளது.

இவற்றில் யாழ்.நகரில் உள்ள பல இடங்கள் அனைவரினதும் கண்களுக்கு தெரியக் கூடியதாகவும் அனைவரின்மூக்கினால் நுகரக் கூடியதாகவும் மிகவும் மோசமான முறையில் மாசடைந்துள்ள வாய்க்கால்கள், குளங்கள் என எத்தனையோ விதமான இடங்கள் காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் அவற்றையெல்லாம் கண்டும் காணாதது போல் இருந்து விட்டு அதிகாரிகள் வீடுகளின் கோடிப்புறத் தில் காணப்படும் இளநீர்க்கோம்பைகளுக்கும் சிரட்டைகளுக்கும் நடவடிக்கை எடுக்கின்றனர்.

பொது இடங்களில் நுளம்பு பெருகுவதை தடுப்பதுடன் வீடுகளுக்கும் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டால் அதிகநன்மையாக அமையும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

புல்லுக்குளம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதியிலுள்ள குளங்கள் என்பனவும் வாய்க்கால்கள் என்பனவும் மிக மோசமாக மாசடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறான இடங்களில் டெங்கு நுளம்பு பெருகாதா? வீடுகளில் மட்டுமா டெங்கு நுளம்புகள் பெருகும் என பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

வீடுகளின் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்கும் பொதுமக்களும் மேற்படி குளம் மற்றும் வாய்க்கால்களில் பெருகும் நுளம்புகளினால் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகின்றனர்.

யாழ்.நகர், புறநகர் பகுதிகளில் காணப்படும் பழைமைமிக்க, பெருமைமிக்க குளங்கள் பொலித்தீன் பைகளினாலும் சாராயப் போத்தல்களினாலும் நிரம்பிக் காணப்படுகின்றது.

இக்குளங்களை திருத்துவதற்கு பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு வேலைகளினை செய்வதற்கு மழை தான் தடையாக உள்ளது. மழை நின்று விட்ட பிற்பாடு புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது வாய்ப்பேச்சிலேயே முடிவுற்றுள்ளது.

கடந்த வருடம் யாழ். போதனா வைத்தியசாலையில் 600 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டதோடு இருவர் உயிரிழந்துமுள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் கடந்த 14 நாட்களுக்குள் 30 இற்கும் அதிகமாக டெங்கு நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலம் கடக்கும்போது டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றதே தவிர குறைவடைவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் அதிகாரிகள் இவ்வாறான பொது இடங்களில் ஏற்பட்டுள்ள சூழல் மாசடைதலினை கண்டு கொள்ளாமல்விட்டால் அதன் தாக்கம் மேலும் அதிகரித்தே செல்லும்.

தனியே சுகாதாரத் துறையினரினை மட்டும் சுட்டிக்காட்டாமல் பிரதேச, மாநகர சபைகளும் ஒத்துழைத்து தத்தமது பிரதேசங்களில் உள்ள குளங்கள், பற்றைகள், வாய்க்கால்களை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-4)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

## ஆங்கில நாளேடு தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்துவரும் நாட்களில் அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமைச்சரவையை மாற்றியமைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

இதன்போது சில அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அதேவேளை பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளபோதிலும் பிரதமர் பதவியில் மாற்றம் செய்வது குறித்து இலங்கை அரசாங்கம் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் அந்நாளேடு தெரிவித்துள்ளது. (அ-2)

# பொங்கல் பரிசு வழங்கினார் 'ஜெ'

முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவை அடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் இலங்கை அகதிகள் முகாமில் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது.தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதாவின் அனைத்து நிவாரண அரிசி கார்டுகளுக்கும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, நூறு ரூபா அடங்கிய பரிசுத் தொகுப்பு வழங்க உத்தரவிட்டார். அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள நிவாரணக் கடைகளில் பொங்கல் பரிசு வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் இலங்கை அகதிகளுக்கு பொங்கல் பரிசு குறித்து எந்த அறிவிப்பும் இல்லாமல் இருந்த நிலையில் பல்வேறு அமைப்புக்கள் இலங்கை அகதிகளுக்கும் பொங்கல் பரிசை தமிழக அரசு வழங்க உத்தரவிட்டார். இதையடுத்த தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் பொங்கல் பரிசு மொத்தம் 499 பேருக்கு வழங்கப்பட்டது. (அ-2)

# உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதியை பிரதம நீதியரசராக நியமிக்கலாம்

(கொழும்பு)



நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்களின் படி உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதி ஒருவர் பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிப்பது உகந்தது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் நீக்கப்பட்டமை தொடர்பாக பிரச்சினை தொடர்ந்து செல்வதால் சிறந்த நடவடிக்கையாக சம்பிர்தாய பூர்வமாக பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவது சிறந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். உயர் நீதிமன்ற நீதி அரசர்களை தவிர வேறு ஒருவரை புதிய பிரதம நீதிய்ரசராக நியமித்தால் அது பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒருவர் நியமிக்கப்படாவிட்டால் அந்த நியமனத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வங்காலை பிரதான வீதியை புனரமைக்க கோரிக்கை

(மன்னார்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபா செலவில் கடந்த வருட இறுதியில் வங்காலை பிரதான வீதியின் திருத்த வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

ஆனால் தற்போது அவ் வீதிகளின் சில இடங்கள் உடைந்த நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிப்பதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வீதிகளின் திருத்த வேலைகள் நிறைவடைந்து இரு மாதங்கள் மட்டுமே கடந்த நிலையில்,

மழை காலங்களில் நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் அமைப்பும் சீரற்று காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக உரியவர்களிடம் வினவிய போது வீதியின் திருத்த வேலைகளுக்குள்ளேயே வடிகாலமைப்பும் காணப்படுகின்றது என தெரிய வருகின்றது.

மழை காலங்களில் இவ் இடங்களில் நீர் தேங்கி நிற்பதால் மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் வீதியை புனருத்தானம் செய்து தரும் படியாகவும் மக்கள் கேட்டு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பட்டிப்பொங்கல் திருநாள்

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும் அதன் பக்கத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவகைப்



பசுக்கள் இருக்கும். இவை முறையே, கபில நிறம், கருநிறம், வெண்ணிறம், புகை நிறம், செந்நிறம் உடையனவாம். இவ்வைந்தும் சிவனது திருவருளினாலே திருபாற்கடலில் இருந்து சிவபூசையின் பொருட்டு யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன. இப்பசுக்களின் உறுப்புகளிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்கும்.

இத்துணைச் சிறப்பினவாகிய பசுக்களை இயக்குங்கால் சிறிதும் வருந்தச் செய்யாமல் இரக்கத்தோடு பலாசங்கோலினாலே மெல்ல ஓங்கி போ போ என்று வழிநடத்த வேண்டும். இரக்கமின்றிக் கோபித்து அதட்டியடிப்போர் நரகத்தில் வீழ்வர். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவைகளை வலஞ்செய்து துதித்து வணங்கி புல்லுக் கொடுத்தோர் சிவலோகத்தை அடைந்து இன்புறுவர். பசுக்களைத் தீண்டினும் தீவினைகள் நீங்கி நல்வினைகள் பெருகும். அவைகள் இம்மை, மறுமை இரண்டி னும் பயனைத் தரும்.


பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து ஆற்றுமண், ஓடை மண், புற்று மண், வில்வத்தடிமண், அரசடி மணி என்பவைகளால் நிலத்தை மெழுகி நாடோறும் கோசல கோமயங்களை புறத்தே நீக்கி சுத்தி செய்ய வேண்டும். முசகம் வராமல் தூபம் இடுக. தீபங்கள் ஏற்றுக. சாலை எங்கும் பூமாலை நாற்றுக. பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என் னும் சொல்லைச் சொல்லி மெல்ல மெல்ல புகுவித்து சிரத்தையோடு புல்லைக் கொடுத்தல் வேண்டும். அட்டமி தோறும் பசுக்களை நீராட்டி பூச்சூட்டி அன்னமும் ஜலமும் ஊட்டி தூபதீபம் காட்டி வணங்குதல் வேண்டும்.

பசுக்களை வேனிற்காலத்திலே சோலைகளிலும் மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும் பனிக்காலத்திலே வெயில் மிகுந்த வெளிகளிலும் இடர் உறாவண்ணம் மேய்க்க.பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும் பூசை செய்யாதவர்களும் காக்காத பாவிகளைத் தண்டியாத அரசனும் நரகத்தில் வீழ்வார்கள்.


ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும் சிவனுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானம் செய்தலும் குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைச் சிவசந்நிதிக்குத் தானம் செய்தலும் சிவனது திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும் இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம். பசுக்கள் தரும் பால், நெய், தயிர், கோசலம் கோமயம் என்னும் பஞ்ச கௌவியங்களையும் இறைவனுக்கு அபிஷேகம் செய்யலாம்.

தொகுப்பு:-
சிவலோகநாததேசியர்

## பாவமறுக்கும் பட்டிப் பொங்கல்




நகரங்களை வாழ்விக்கும் நல்லதோர் பொங்கலிது
நம்மூதாதையர் வழிகாட்டிய நாட்டுப் பொங்கலிது
பகருங்களே இப்பொங்கல் பாட்டிமார் உவந்ததே
பாரெல்லாம் வரவேற்கும் பட்டிகளின் பொங்கலிது
நிகர் உங்கள் வாழ்வெலாம் நித்திலமாய் ஒளிரும்
நகருளோரும் வணங்கிடவே நலமாகும் பட்டிப்
பொங்கல்
சிகரங்களாகும் நகரங்களே சிந்திக்கவே
கிராமங்களும்
சீவன்களாம் வாய்விடாச் சாதிகளை சேவியுங்கள்
பாவ மறுமே!



கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## பட்டிப் பொங்கல் வாழ்த்துக்கள்



தை பிறந்தால் வழி பிறக்கும்
சூரியன் மகராசிக்குள்
பிரவேசிக்கும் தினம்
தைப் பொங்கல் மறுநாள்
பட்டிப் பொங்கல்
கோமாதா இடபத்திற்கு
பொங்கல் இட்டு
கோமாதா இலக்குமியின்
அருளைப் பெற்றுக்
கொள்வோம்

இ.உ.குமார்
காரைநகர்

## எம்.பிக்களுக்கு எதிராக 21 ஆம் திகதி நடவடிக்கை

குற்றப்பிரேரணைக்கு எதிராக கட்சியை பயன்படுத்தி ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொழிற்சங்க கூட்டத்தின் போது தீர்மானிக்கப்படும் என அக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

யானைச்சின்னத்தில் போட்டியிட்டு அரசு பக்கம் கட்சி தாவி குற்றப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரத்ன, அர்ல் குணசேகர உள்ளிட்ட பலர் அரசுடன் இணைந்து குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். (அ-2)

## நீதவான்களை சந்தித்து பேசினார் ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் நீதவான்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்வது தொடர்பான ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக உச்ச நீதிமன்ற நீதியரசர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான்களை சந்தித்து பேச்சுவாாத்தை நடத்தியமைக்கான காரணமானது பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்பதனை ஜனாதிபதி விளக்குவதற்காகவே நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த சந்திப்பின் போது பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டவிரோதமானது என ஆரம்பம் முதல் தெரிவித்து வந்த ஒரேயொரு நீதவான் தவிர ஏனைய நீதவான்கள் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## திருட்டுத்தனமாக
## மருந்து கொள்வனவு செய்யும் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை

அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்துப் பொருட்களை திருட்டுத்தனமாக கொள்வனவு செய்து அதனை நோயாளர்களுக்கு அதிக விலையில் விற்பனை செய்யும் தனியார் மருத்துவ நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தேசிய மருந்து பொருள் அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு தொகை மருந்துப் பொருள் நுவரெலியா நகர மத்தியிலுள்ள தனியார் மருத்துவ நிலையமொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் மேற்படி பணிப்புரையை விடுத்திருக்கின்றார்.

இதனடிப்படையில் தேசிய மருந்துப்பொருள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகமவின் ஆலோசனையின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விசாரணையில் குறித்த மருந்துப் பொருளில் பொறிக்கப்பட்டிருந்த அரச இலச்சினையும் , அவை நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு சொந்தமானவை என்று குறிப்பிடப்பட்டிருந்தும் அழிக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

அம்மருந்துப் பொருட்களில் குறிப்பிடப்பட்டிருந்த வகை இலக்கங்களின்படி அவை கொழும்பு மருந்துப்பொருள் விநியோகப் பிரிவில் நுவெரெலியா பொது வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதனடிப்படையில் குறித்த மருந்தக உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மக்களுக்கு மருந்துப் பொருட்களை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கம் வருடத்திற்கு 2ஆயிரத்து 100 கோடி ரூபாவை செவிடுகின்றது. மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவேண்டிய மருந்துப் பொருட்களை இவ்வாறு மோசடி செய்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது
### ஹர்ஷ டி சில்வா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பொருளியல் நிபுணருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றில் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும்இதனை ஓர் கறுப்பு வெள்ளிக்கிழமையாக கருதப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வரலாற்றில் மிகவும் வெட்கப்பட வேண்டிய நாட்களில் ஒன்றாக கடந்த வெள்ளிக்கிழமை அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாராளுமன்றில் போலியான பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதில் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


அடக்குமுறைகள் காரணமாக நீதிமன்றம் அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு அடிபணிய வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாறியமனம்

## அம்புலிமாமா கதைகள்



ஓர் ஊரில் காத்தவராயன் என்ற ஒரு கசாப்புக்காரன் இருந்தான். அவன் நாளொன்றுக்கு நாற்பது பசுக்கள் வீதம் அறுத்துவிற்று வந்தான். பலகாலந் தொட்டு இத் தொழிலில் பழக்கமுள்ள அவனை இரக்கமற்ற கொலை பாதகனாக மாற்றியதில் ஆச்சரியமில்லை.

இதனால் அவனுக்குக் குழந்தைப்பேறு இல்லாமலிருந்து கடைசியில் காளியம்மன் கடாட்சத்தால் ஒரு புதல்வி பிறந்தாள். அவளுக்கு அம்பாள் என்று பெயரிட்டு மிகச் செல்லமாக வளர்த்து வந்தான். அம்பாள் பிறந்த வேளை காத்தவராயனின் கல்மனம்கூட கரைந்து ஆசையும் அன்பும் உண்டாகி வளரத் தொடங்கியது.

அம்பாளும் வளரவளர அதிக அழகுடனும் அதற்கேற்ற அருமையான குணங்களும் பிறரைக் கண்டு இரக்கம் கொள்ளும் சுபாவமும் கொண்டிருந்தாள். அதனால் ஊரிலுள்ளவர்களுக்கு அவள்பேரில் அன்பு உண்டாயிற்று. அம்பாளுக்கோ சிறுவயதிலிருந்தே புலால் உண்ணும் வழக்கம் கிடையாது. ஒரு கசாப்புக்காரன் மகள் புலால் உண்ணுவது கிடையாது என்றால் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள். இதனால் ஜனங்களுக்கு அவள் பேரில் மிக மதிப்பு உண்டாகியது.

ஒருநாள் காத்தவராயனிடம் ஒருவர் மிக அழகான கன்றுக்குட்டியை விற்றார். அதை அம்பாள் தன்னுட்ன் பிறந்த பிறவியைப் போல் கருதி மிக அன்பாக அதனுடன் விளையாடிக் கொண்டு சந்தோசமாக காலம் கழித்து வந்தாள்.

காத்தவராயனும் அதைக் கண்டு கழித்தான். ஒருநாள் அவள் தன் கன்றுக்குட்டியை கட்டி முத்தம் கொடுத்தவாறு அப்பா எவ்வளவு அழகாக இருக்கிறது இக்கன்று. இதன் கண்கள் எப்படி பளபளவென்று மாசில்லாத மணி போன்று ஜொலிக்கிறது என்றாள். அச்சமயம் அக்கன்றும் அம்பாளுடைய மேனியை தன் நாக்கினால் அன்பாக நக்கியது. அம்பாள் என்ன நினைத்துக் கொண்டாளோ நீ யாரோ, நான் யாரோ, ஆராரோ, ஆரறிரோ என்று பாடிக் கொண்டே முத்தம் இட்டாள். இதையெல்லாம் பாத்துக் கொண்டிருந்த காத்தவராயனுக்கு திடீரென அவனை அறியாமலே மனதில் குழப்பம் உண்டாகியது. அச்சமயம் அம்பாள் அவனைப் பார்த்து அப்பா என் பெயர்கூட இக்கன்றுக்கு தெரியும். அம்பா என்று கூப்பிடுகிறது பார். இது இருக்கட்டும் நான் ஒன்று கேட்பேன். கோபங்கொள்ளமாட்டீர்களே என்றாள்.

காத்தவராயன் மகளை மடியில் உட்காரவைத்துக்கொண்டு எதற்காக உன்மேல் கோபம்வரும். நீ என்ன கேட்டாலும் நான் கோபங் கொள்ள மாட்டேன். எதுவேண்டுமானாலும் கேள் என்றார்.

அப்பா நீ தினந்தோறும் அழகான பசுக்களையும் கன்றுகளையும் ஆயிரக்கணக்கில் கொன்று பாவத்தைச்சுமந்து கொண்டிருக்கிறாய். ஆகையால் நீ எக்காரணம் கொண்டும் என் கன்றை மட்டும் உன் கையால் தொடமாட்டேன் என்று என்பேரில் ஆணையிட்டுச்சொல் என்று சொல்லி தகப்பனை அதற்குப் பணியவைத்தாள் அம்பாள். காத்தவராயனின் மனம் கலங்கியது.


ஒருநாள் இரவு காத்தவராயன் நன்றாக தூங்கிக்கொண்டிருந்தான். அச்சமயம் அவ்வூர் அதிகாரி கதவைத்தட்டி காத்தவராயா என் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்துள்ளனர். எனக்கு பிராண சிநேகிதர். மிகவும் உயர்தரமான இறைச்சி வேண்டும். எவ்வளவு இருந்தாலும் உடனே கொடு என்றார். காத்தவராயனோ கொஞ்சமும் இம் மாதிரிவரும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் வீடு தேடி வந்து கேட்காத மனிதர் கேட்கும் சமயம் தன் வீட்டில் துளி அளவுகூட மாமிசம் இல்லாதிருப்பது பற்றி வேதனை அடைந்தான். இருப்பினும் அவனிடம் சரி நீங்கள் செல்லுங்கள். நானே இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்கள் வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்றான்.

ஆனால் அதிகாரி வேண்டாம்பா நீ அவ்வளவுதூரம் வரவேண்டாம். இங்கேயே தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்கிறேன். நீ கொண்டு வா என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார்.

வேறு வழியில்லாமல் காத்தவராயன் உள்ளே சென்றான். அச்சமயம்வேறு மாடுகள் இல்லையையாதலில் தன் மகளுடைய அருமையான கன்றை தொழுவத்திலிருந்து ஓட்டி வந்து மாடு அறுக்கும் இடத்தில் கட்டி கத்தியை எடுத்து வரச்சென்றார்.

அதற்குள் அக்கன்று அம்பா அம்பா என்று கூப்பிட்டது. தூங்கிக்கொண்டிருந்த அம்பாள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து தன் கன்று எப்பொழுதும் கட்டியிருக்கும் இடத்தில் காணாமல் ஓட்டமாக ஓடி மாடு வெட்டும் இடத்தில் தன் அருமைக்கன்று கட்டியிருக்கவே கண்டாள்.

தனது தகப்பனார் செய்ய இருக்கும் உத்தேசத்தை அறிந்து கொண்டாள். தகப்பனார் பேரில் கோபமும் வருத்தமும் மாறிமாறி வந்தன. சிறு பெண்ணான அவள் என்ன செய்வதென்று தோன்றாமல் சற்றுநேரம் கன்றினிடமே உட்க



ார்ந்தாள். திடீரென அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே தன் தகப்பன் கத்திகளை வைத்திருந்த இடத்திற்குச்சென்று இரண்டு கத்திகளுக்கு நடுவே தன் கழுத்தை நுழைத்துக்கொண்டு படுத்துவிட்டாள்.

காத்தவராயன் கத்தியை எடுக்கச்சென்றதும் தன் மகள் இருந்த நிலையைக்கண்டு செயலற்று நின்றுவிட்டார். பின்பு தன் புதல்வியை கத்திகளின் இடையில் இருந்து நீக்க பிரயத்தனம் செய்தான். ஆனால் அம்பாள் அவ்விடமிருந்து நகராமல் அப்பா என்னை முதலில் கொன்றுவிடுங்கள். பின்பு என் கன்றைக் கொலை செய்யலாம் எனக்கே துரோகம் செய்ய நினைத்தீர்கள் அல்லவா துரோகம் செய்வது கொலை செய்த பாவத்திற்கும் மிஞ்சியது என்று புலம்பினாள்.

காத்தவராயன் குழந்தாய் நீ சொல்வது முற்றிலும் உண்மை. என் அறியாமையை போக்கினாய் என்று சொல்லிக்கொண்டே மயக்கமுற்று கீழே விழுந்தான். உள்ளே சென்று வெகுநேரமாகியும் காத்தவராயன் வராததைக் கண்டு கிராம அதிகாரி கோபத்துடன் உள்ளே சென்றார். அங்கு அவனும் அவன் புதல்வியும் இருந்த கோலத்தைக்கண்டு விளித்துக் கொண்டு நின்றான். அச்சமயம் கன்று அம்பா என்று கதறியது. அம்பாள் எழுந்தோடி அதனுடைய கழுத்தை சேர்த்துக்கட்டிக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டாள். காத்தவராயன் மூர்ச்சைதெளிந்து எதிரே கன்றுக்குட்டியுடன் நிற்கும் தன் மகளை சேர்த்துதழுவி சந்தோசித்தான்.

பின்பு கிராம அதிகாரியைப் பார்த்து நடந்தவற்றைக்கூறி சுவாமி நான் என் தொழிலை இன்றுமுதல் விட்டுவிட்டேன். நானும்புலால் உண்ணமாட்டேன். மற்றவர்களையும் அம்மாதிரி இருக்கும்படி செய்வேன். பசு பாதுகாப்பிற்காக உழைப்பேன். பலஊர் சென்று கோசம் ரக்சனைக் காகப்பாடுபடுவேன் என்று சொல்லியவாறு வெளியே சென்றான். அம்பாளும் தன் தகப்பனார் மனம் திருந்தியதைப் பற்றிச் சந்தோசித்தாள். இவ்விடயங்களை கேட்ட ஊர் மக்கள் அம்பாளைப் போற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**15** மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

"வாங்க நன்னா வாங்க" ன்னு வாய்நெறைய கூப்பிட்டாரு கருத்தமாயி.

"வாங்க சிய்யான் வாங்க. நன்னி சௌக்கியமா?" ன்னு கேட்டு சொம்பு நிறைய குடிதண்ணி குடுத்துட்டுப் போனா சிட்டம்மா.

"ஏ பக்கிகளா! பலகாரம் வாங்கிட்டு வாங்க"ன்னு சில்லரை கொடுக்கவும் சின்னப்பாண்டியும் தேனும் சேந்து வண்டி உருட்டிக்கிட்டே வடை வாங்க ஒடுதுக கடை வீதிக்கு.

"கை நனைக்காமப் போகக் கூடாது"

"இருக்கட்டும். இன்னொரு நாளைக்கு வரேன்."

"நல்லாயிருக்கு கதை இம்புட்டுத் தூரம் வந்துட்டு எலும்பு கடிக்காமப் போனா எப்படி?"


தாவாரத் திண்ணையிலயிருந்து விசுக்குன்னு எந்திரிச்சு உள்ள போனாரு கருத்தமாயி.

சட்டைப் பையி, மாடக்குழி, அடுக்குப் பானை, தகரப்பொட்டி எல்லாம் தடவித்தடவிப் பாத்தாலும் காக்கிலோ கறிக்குக் காசு சேரல.

முத்துமணிய இழுத்துக் கைக்குள்ள வச்ச அணைச்சுக்கிட்டு கமுக்கமாச் சொல்றாரு:

"கசாப்பு சுப்பு கடைக்கு ஓடிப் போயி அப்பன் சொன்னேன்னு காக்கிலோ கறி வாங்கியாடா. போனேன் வந்தேன்னு வாடா, போ"

தாமரை எலையில பச்சைக்கறிய வாங்கி வந்தவன் பாதியிலேயே பிரிச்சான். கறிக்கு வீங்கிக் கெடந்த பயலுக்கு உள் நாக்கு ஊறுது.



ஈரலாப் பொறுக்கி எடுத்தான்; ஒவ்வொரு கொழுப்பா எடுத்து ஒண்ணு சேத்தான். சும்மா ஆவாரங்குழைய ஆடு திங்கற மாதிரி பச்சைக் கறிய நறுச் நறுச்சுன்னு மென்னு தின்னு முழுங்கிட்டான். மிச்சமிருந்த எலும்பும் கறியும் கொண்டாந்து ஆத்தாக் கிட்டக் கொடுத்தான்.

"இது கறியாக்கும்- இதுல ஒரு கொழம்பாக்கும்? அண்டாவுல கொழம்பு வைக்கிற வம்சத்துல வந்தவளுக்கு

## வெடிச்ச பூ; விவரமான ஆளு...!

அகப்பையில கொழம்பு வைக்கிற பொழப்பாகிப் போச்சேடா

கொழம்பு கூட்டிக் கொதிக்க விட்டுட்டு கன்னுக் குட்டிக்குத் தண்ணி வைக்கப்போன சிட்டம்மா திரும்பி வந்து பாத்தா- கொதிக்குது கொழம்பு மட்டும்; ஒரு கறி இல்ல. அரைவேக்காட்டிலேயே அகப்பையைப் போட்டு தின்னு தீத்துட்டுப் போயிட்டான் முத்துமணி.

கடைசியில கருத்தமாயி வாக்குப் பலிச்சிருச்சு.


எலும்புதான் கடிச்சிட்டுப் போனாரு ஈசா ராவுத்தரு. வேற என்னத்தப் பண்ண?

எல்லா வெள்ளாமையும் அடிவாங்குது.

சோளம் போட்டாரு - சொங்காப் போச்சு. கத்தரி நட்டாரு-வேர்ப்புழுவு விழுந்துபோச்சு. காட்டு வெள்ளாமையா வரட்டும்னு கம்பு வெதச்சுப் பாத்தாரு; கடனை அடைக்க விளைய வேண்டிய நிலத்துல கஞ்சிக்கு வெளஞ்சதுதான் மிச்சம்.

சரி, பருத்தி நடலாம்னு முடிவு பண்ணிட்டாரு கருத்தமாயி. நல்ல வெல வித்துச்சு பருத்தி அப்ப. கிலோ நாலு ரூவா; நயம் பருத்தி அஞ்சு ரூவா.

சாமிதான் ஏய்க்குது; பூமியுமா ஏச்சுப்புடும்? பாத்துருவம்



கனுப்புழுவு தாக்காம இருக்க வேப்பம் புண்ணாக்கு வாங்கி விதைச்சு விட்டாரு.

"தீரப்போகுதுரா பஞ்சம்"னு உரு மால வரப்புல போட்டுட்டு வாய்கால்ல படுத்து சொளை சொளையாக் கனாக் கண்டு ஒறங்கினாரு. எம்பது நாள்ள பருத்தி அங்கொண்ணும் இங்கொண்ணுமா வெடிக்குது. தொண்ணூறு நாள்ள தோட்டம் பூரா விட்டுவிட்டுத் தெரியுது வெள்ளைவெள்ளையா.

ஈசானிய மூலையில அப்பன் ஆத்தா தங்கச்சி மரத்துக்கு சந்தனம் குங்குமம் தொட்டுவச்சு, சூடம், பத்தி கொளுத்தி, வாழப்பழம் கண் தெறந்து, "குலசாமிகளா... கூடவே வாங்க"ன்னு

தை இருவதுக்குத் தோட்டமெல்லாம் ஊன்டிட்டாரு பருத்தி வெதைய. மாசி பத்துக்கு மொதல் களை;


பங்குனி இருவதுக்கு ரெண்டாம் களை. குப்புன்னு எந்திருச்சுப் பசபசன்னு பசப்பெடுத்து நிக்குது பருத்திச்செடி. சித்திரை பத்துக்கு மூணாம்களை எடுத்து மண் அணைச்சு விடவும், பூவெடுத்துப் பிஞ்சு எறங்கிக் குழந்தைப்புள்ளைக மாதிரி

கையும் காலும் ஆட்டி நிக்குதுக பருத்திச்செடிக.

குடும்பமே தோட்டத்துல குடி இருக்கு. பள்ளிக்கூடம் போன நேரம் போக சின்னப்பாண்டியும் தேனும் ஊடமாட ஓடியாடிவேலை செய்யறாக. பாக்கப்பாக்க ஆசையா இருக்குன்னு பருத்திச் செடிகளுக்குள்ளயே படுத்துக்கெடக்கா சிட்டம்மா. முத்துமணி மட்டும் கடன் கொடுத்தவன் கேக்கவர்ற மாதிரி வந்து வந்து போறான்.

உரம் வைக்கணுமே!

காசிநாடார் கடையில கடன் வாங்கி பொட்டாசு யூரியா வச்சாரு.



ஓங்கி அருள்கொண்டு ஒரு கத்துக் கத்திட்டுக் குடும்பத்தோட குனிஞ்சு தடவு பருத்தி (முதல் எடுப்பு) எடுக்குறாரு கருத்தமாயி.

பெரிய சாக்கு நெறைஞ்சு, குட்டிச்சாக்குல பாதி வந்திருச்சு பருத்தி. பெரிய சாக்கை தலையில வச்சுக் குட்டிச்சாக்கைக் கையில புடிச்சு தேவதானப்பட்டி காசி நாடார் கடைக்கு நடந்துட்டாரு கருத்தமாயி.

கணக்கு ஓடுது மனசுக்குள்ள.

"இழுத்துப்பறிச்சு நிறுத்தாலும் இருவத்தி ரெண்டுகிலோ வரும். அடிமாட்டு வெலையா அஞ்சு ரூவா வச்சாலும் இருவது அஞ்சு நூறு, ரெண்டஞ்சு பத்து; நூறும் பத்தும் நூத்திப்பத்து. நல்லவரு நாடாரு; கடனை அப்புறம் கழிச்சுக்கய்யான்னு சொல்லி காச வாங்கிட்டு வந்துர வேண்டியதுதான்."

கருத்தமாயி கணக்குத் தப்பல. ஒரு கிலோ எச்சாவாகவே இருந்துச்சு. "நான் கும்புடுற சாமி குறைவைக்கல; அஞ்சு ரூவா கூடவே கொடுத்துருச்சு." ஆகாயத்தப் பாத்து ஒரு கும்படு போட்டுட்டு அக்குள் வேர்வையைத் தொடைச்சுக்கிட்டாரு.

நிறுத்துப்போட்ட பருத்தி உள்ள ஓடி விழுந்துருச்சு. கணக்குப்பாத்துக் காச கொடுப்பாரு நாடாருன்னு ஒரு ஓரமா ஒதுங்கி நிக்கிறாரு கருத்தமாயி.

கழுதையும் குதிரையும் வந்து வந்து போகுதுக- காசு வந்தபாடு இல்ல. வந்த சனம் போன சனமெல்லாம் ஓயவும் "மொதப் பருத்தி போட்டிருக்கீக வெறுங்கையோட வீடுபோகவேணாம்-இந்தாய்யா இதை வச்சுக்க"-ன்னு பத்து ரூவாயும் ஒரு ரூவாயும் எடுத்து நீட்டுனாரு நாடாரு.

கையில வாங்குன நோட்டுகளப் பிதுக்கிப் பிதுக்கிப் பாத்து மேலயும் கீழயும் முழிக்கிறாரு கருத்தமாயி

கணக்குச் சொல்றாரு நாடாரு:

உரம்வச்ச வகையில பழைய கடன் ஒரு தொண்ணூறு. இப்ப கொடுத்தது பதினொண்ணு. நீ வாங்கிட்டு வரச் சொன்னேன்னு முந்தாநாளு உன் மூத்தபய முத்துமணிவசம் குடுத்து விட்டது முன்னூறு. ஆக மொத்தம் நானூத்தி ஒண்ணு. போயிட்டு வாய்யா. பருத்தி போடப் போடக் கணக்கக் கழிச்சுக்கிர்றேன்

ரெண்டு கையும் தூக்கி நல்லாக் கும்பிட்டாரு நாடாரு.

"முன்னூறு வாங்கிட்டானா? களவாணிப்பய மகனே" ன்னு வாய் வரைக்கும் வந்துச்சு வார்த்தை.

"சும்மா சொல்லக்கூடாது- அடக்க சடக்கமாத்தான் பிள்ளைய வளத்திருக்க. ஒடம்பும் சொல்லும் பணிஞ்சு நின்னான் பய. நல்லா வருவான்."

முத்துமணிக்கு நல்வாக்கு வேற சொல்ல ஆரம்பிச்சட்டாரு நாடாரு.

உடம்பு வேர்த்ததுல உள்ளங்கை ரூவா நனையுது.

அன்னைக்குத் தான் மொத மொதலா ஒருகேள்வி எழும்புது மனசுல;

"வந்து வாச்சவன் மகனா? எமனா?"

அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள்ல தெரிஞ்சு போச்சு- அவன் மகன் இல்ல- எமன்தான்னு... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்

# 14.01.2013-12.02.2013




அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்
சொத்துக்கள் சேரும்!

## கீர்த்தியும் புகழும் பொருளும் ஒன்று சேரும்; ஆற்றல் மிக்கவர்கள் ஆதரவு கரம் நீட்டுவர்

**சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற 'மேடராசி அன்பர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் செயல் ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் பலம் பெற்றிருக்கின்றன. அதை குருவும் பார்க்கிறது. கூட்டுக் கிரக யோகம், கூடுதலான பலன் கிடைக்கும் மாதமாக இம் மாதம் அமைவதால் வாட்டங்கள் தீரும். வாய்ப்புக்கள் வந்து கொண்டே இருக்கும். உதவிகள் கேட்ட இடத்தில் கிடைக்கும்.

இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். பூமிகாரகன் செவ்வாய் என்பதால் பூமியும் சேரும், பொருளும் சேரும், சாமி துணையோடு சகல துறைகளிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

குடும்ப ஸ்தானத்தில் குரு வக்ரம் பெறுவதால் குதூகலம் குறையுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். விரயாதிபதி, தானே வக்ரம் பெறுவதால் வேண்டிய பணம் வந்து கொண்டேயிருக்கும். கரைந்தது தொகை என்று கவலைப் பட்டவர்கள் நிறைந்த மனதோடு நிம்மதி காண்பர். உறைந்து போய் ஆட்கார்ந்திருந்தவர்கள் எல்லாம் இனி உற்சாகத்துடன் பணி புரிய முன் வருவார்கள்.

ஜென்மத்தில் கேது, சிக்கல்கள் உருவாக்காமல் இருக்குமா என்று நீங்கள் நிணைக்கலாம். உண்மையிலேயே கேதுவும் இராகுவும் ஒவ்வொருவருடைய வாழ்க்கைப் பயணமும் வெற்றிகரமாக அமைய வழிகாட்டும்.

ஞானகாரகன் கேது இராசியில் சஞ்சரிப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். என்ன இருந்தாலும் இதற்கென்று ஒரு பரிகாரம் இருக்கிறது. அதுதான் சர்ப்ப சாந்தி. அதைச் செய்வதோடு குடும்பச் செவ்வாயால் குறையாத செல்வம் கிடைக்க அன்பு மனதோடு அழகன் முருகனை வழிபாடு செய்யுங்கள்.

**குடும்பச் செவ்வாய் கொடுக்கும் பலன்கள்!**

ஜனவரி 23 ஆம் திகதி குடும்பத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொன்னான நேரமிது. ஆசைகள் நிறைவேறும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அரங்கேறும். ஓசைப்படாமலேயே ஒரு சில நல்ல காரியங்களைச் செய்ய முன் வருவீர்கள். பாசம் காட்டி உடன் பிறப்புக்களும் உறவினர்களும் பழகுவர். நேசிக்கும் உடன் பிறப்பு ஒருவரால் நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி கூடும்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 28 ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3, 6 இற்கு அதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஊதிய உயர்வும் வந்து சேரும். பயணம் பலன் தரும். பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். இளைய சகோதரம் இனி ஒத்து வரலாம். எதிரிகள் விலகுவர். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**சுக்ர பெயர்ச்சியும் குருவின் வக்ர நிவர்த்தியும்!**

ஜனவரி 29 இல் மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். பெப்ரவரி 6 இல் குரு வக்ர நிவர்த்தியாகிறார். 2, 7 இற்கு அதிபதியும் 9, 12 இற்கு அதிபதியும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளும் நேரமிது. எதிர் பார்த்த திருப்பங்கள் ஏற்படும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். வாதாடியவர்கள் விலகுவர். ஆதாயம் அதிகம் கிடைக்கும். நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் நல்ல மாற்றங்களாக அமையும். உடல் நலத்தில் இருந்த தொல்லை அகலும். இம் மாதம் விநாயகர் வழிபாடு வேதனை போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலும். சுகங்களும் சந்தோசங்களும் கூடும். உச்ச சனி உடன்பிறப்பு வழியில் ஆதாயத்தை வழங்கும். நூதனப் பொருட்களும் இடம், பூமி என்று வாங்கும் அமைப்பும் உருவாகும் மாதம் இது. கூட்டுக் கிரக யோகம் இருப்பதால் அருகில் இருப்பவர் முதல் அந்நிய நாட்டவர் வரை அனைவரும் ஒத்துழைப்புச் செய்வர். கணவன்- மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். இராகு- கேதுக்கள் வளர்ச்சிக்கு நடுவில் தளர்ச்சியைக் கொடுக்காமல் இருக்க சர்ப்ப சாந்தி செய்வது நல்லது. குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

## சிவல்புரி சிங்காரம்




கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

## பொன், பொருட்கள் வாங்குவதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும்; இன்பங்களை ஏராளமாகச் சந்திக்க வைக்கும் நேரமிது

**அஷ்டலட்சுமியும் அடியெடுத்து வைக்கும் நேரம்!**

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையிலேயே எப்பொழுதும் இருக்கும் இடப இராசி நேயர்களே!

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தன வரவு பெருகும் என்றே சொல்ல வேண்டும். பொன்னான புதன் 9 இல் சஞ்சரிக்க பூமிகாரகன் செவ்வாய் அதோடு இணைந்திருக்க எந்த நாளும் ஒளி கொடுக்கும் சூரியனும் இரவைப் பகலாக்கும் சந்திரனும் மாதத் தொடக்கத்தில் மகரத்தில் கூடுகின்றனர். எனவே, சோதனைகள் மாறிச் சுகமெல்லாம் வந்து சேரும். சுருக்கென்று பேசியவர் சொல் கேட்க முன்வருவர்.

6 இல் இராகு நிற்க ஆதரவு தரும் லக்னத்தில் குரு நின்றால் அஷ்டலட்சுமி யோகம் வரும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்லும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பொருளாதார முன்னேற்றம் கூடும்.

பொன், பொருட்கள் வாங்குவதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும். இன்பங்களை ஏராளமாகச் சந்திக்க வைக்கும் நேரமிது.

இருந்தாலும் விரய ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் நூதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நுண்ணறிவோடு செயற்படுங்கள். சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் நீங்கள் சாமானியர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டப் போகிறீர்கள். வழக்கில் வெற்றி, வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்களில் இருந்த இடையூறுகள் அகலுதல், நீண்ட தூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுதல் ஆகியவை நடைபெறும்.

மாதத் தொடக்கத்தில் சுக்ரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்க அதை இராகு பார்க்கிறார். எனவே, களத்திர ஒற்றுமைக்கும் கல்யான வாய்ப்புக்கள் கைகூடவும் உள்ளத்தில் உற்சாகம் பொங்கி வரவும் உன்னத நிலையைக் காணவும் துர்க்கை வழிபாடும் இராகு- கேது பிரீதியும் செய்வது நல்லது. கிரகங்களின் ஆதரவும் தெய்வங்களின் ஆதரவும் இருந்தால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் அல்லவா?

**குடும்பச் செவ்வாய் கொடுக்கும் பலன்கள்!**

10 ஆம் இடத்தில் செவ்வாய் முத்தாகச் சஞ்சரிக்கும் நேரம் ஜனவரி 23. இந்த நேரத்தில் தொழில் வளர்ச்சி கூடும். துணையாக இருப்பவர்கள் இணையாக ஒரு தொழில் செய்யலாம் என்று சொல்வர். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வாங்கிய சொத்தால் இலாபம் கிடைக்கும்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

தன பஞ்சமாபதி புதன் 10 இல் சஞ்சரிக்கும் பொன்னான நேரமிது. இனத்தார் பகை மாறும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். சேமிப்பு கூடும் இந்த நேரத்தில் சில்லறைக் கடன்களை நிவர்த்தி செய்து கொள்வீர்கள். நாமகளின் அருளால் பிள்ளைகளின் கல்வி முயற்சி கைகூடும். நலம் யாவும் வீடு வந்து சேரும் நேரமிது.

**சுக்ரப் பெயர்ச்சியும் குரு வக்ர நிவர்த்தியும்!**

ஜனவரி 29 இல் சுக்ரப் பெயர்ச்சி மகரத்தில் நிகழ்கிறது. குருவின் வக்ர நிவர்த்தி பெப்ரவரி 6 இல் நிகழ்கிறது. இந்த இரு நிகழ்வுகளும் உங்களுக்கு நன்மையும் தீமையும் கலந்தே கொடுக்கும். சுக்ரப் பெயர்ச்சி சாதகம் தரும்.

சொல்ல முடியாத அளவிற்கு வருமானம் வந்து சேரும். வக்ர நிவர்த்திக் குருவோ வரவை வந்த மறு நிமிடமே செலவழியச் செய்யும். எனவே அக்கறையோடு யோசித்து செய்த காரியங்களில்தான் அதிகம் வெற்றி கிடைக்கும். இம்மாதம் பிரதோச காலத்தில் நந்தியை வழிபட்டு பெருமையைக் காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் தொட்ட காரிங்கள் துலங்கும். தோள் கொடுத்து உதவ மாற்று இனத்தவர்கள் துணையாக இருப்பர். நூல் படிக்கும் பிள்ளைகள் வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்து சேர்ப்பர். மாதத் தொடக்கத்தில் விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர்.

வீட்டு மருத்துவமும் மாற்று மருத் துவமும் உடல் நலத்தைச் சீராக்கும். மாதத்தின் கடைசி வாரத்தில் மன நிம்மதி குறையலாம். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் ஷிராணியை வெளியேற்றலாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

பதினெட்டாவது திருத்தத்தால் பிரதம நீதியரசை அப்பதவியி லிருந்து ஜனாதிபதியால் வெளியேற்ற முடியும் .அதனை சட்டம் தடுக்க முடியாது. சட்டத்தின் ஆணைக்கு அப்பாற்பட்டவர் ஜனாதிபதி என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசாங்கம் குற்றவியல் பிரேரணையை கொண்டு வந்து பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நிறைவேற்றியுள்ளது. இந்த தீர்மானம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு பிரதம நீதியரசரை வெளியேற்றும் கடிதத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளார்.

ஆனால் பிரதம நீதியரசர் நீதிமன்றம் தனக்கு சார்பாக வழங்கிய தீர்ப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஜனாதிபதியின் கடிதத்தையும் ஏற்காது பலாத்காரமாக பதவியைப் பிடித்துக் கொண்டுள்ளார். இது சட்ட விரோதமாகும்.

பிரதம நீதியரசர் இவ்வாறு அடம் பிடித்தால் 18 ஆவது திருத்தத்தால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி பிரதம நீதியரசரை வெளியேற்ற முடியும் என்றார். (அ-2)

# மேர்வின் சில்வாவுக்கு உயர்ஸ்தானிகர் பதவி?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் களனி தொகுதியின் முன்னாள் அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மேர்வின் சில்வா வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் பதவியொன்று வழங்கப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

சுட்டுக்கொல்லப்பட்ட களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவலவின் கொலையின் பின்னர் மேர்வின் சில்வா மீது பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து களனி தொகுதி அமைப்பாளர் பதவிலிருந்து அவர் இராஜினாமா செய்தார்.

இந்நிலையில் தனக்கு வெளிநாடொன்றுக்கான உயர்ஸ்தானிகர் பதவியொன்றை வழங்குமாறு மேர்வின் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் பலர் மேர்வின் சில்வா மீது நடவடிக்கை எடுக்கும் படி ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளதாகவும் இதனால் ஜனாதிபதி மேர்வின் சில்வா மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை கட்சியினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் தான் தயாராக உள்ளதாக மேர்வின் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். (அ-2)

# தப்பிச் சென்ற கைதிகள் குறித்து விசாரணை துரிதம்

அவிசாவளை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற கைதிகள் தொடர்பில் விசாரணை களை மேற்கொள்வதற்காக விசேடமாக நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை நேற்றைய தினம் சமர்ப்பித்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அவிசாவளை சிறைக்கைதிகள் 10 பேர் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தாக்கி விட்டு தப்பிச் சென்றனர். இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு மூவர் அடங்கிய விசேட குழுவை சிறைச்சாலைகள் திணைக்களம் நியமித்தது. இந்த குழுவே தமது விசாரணை அறிக்கையை நேற்றைய தினம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளது. (அ-2)

# கசிப்பு வைத்திருந்த நபரொருவருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம்

வரணி-கப்பூது கிராமத்தில் பெருமளவான கொள்கலன்களில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கிய தகவலின்படி வரணி பகுதியிலிருந்து ஆவரங்கால் பகுதிக்கு கடத்தப்படவிருந்த பெருமளவான சட்டவிரோத கசிப்பு கடந்த 3 ஆம் திகதி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரும் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் ஒரு சந்தேகநபர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 4 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபருக்கு மேற்படி அபராத தொகையை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் அபராத தொகையைத் செலுத்தத் தவறின் 6 மாத கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் மேலதிக குற்றங்கள் இருப்பின் மேலதிகமாக 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் தீர்ப்பளித்தார். (அ-9-74)

# ரிஸானா நபீக் குடும்பத்திற்கு ஜனசெவன திட்டத்தில் வீடு



(கொழும்பு)

சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ரிஸானா நபீக்கின் குடும்பத்துக்கு வீடொன்றை நிர்மாணித்து கொடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் ஜனசெவன வீடமைப்பு திட்டத்தின் பேரில் மூதூரில் ரிஸானா வசித்த வீடு அமைந்துள்ள காணியில் முழுமை பெற்ற வீட்டை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வீட்டின் நிர்மாண வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் வீட்டின் பரப்பளவு, வீட்டின் வரைபடம் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# மனச்சாட்சியின் அடிப்படையில் தீர்மானம் எடுத்தேன்! - ஜனாதிபதி

(கொ ழும்பு)

மனச்சாட்சியின் அடிப்படையில் தீர்மானம் எடுத்தேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் பதிவு விலக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் தார்மீக பொறுப்பாகும். நீதிமன்றம் என்ற உன்னத பூமியை இழிவுபடுத்த எவருக்கும் அனுமதியளிக்க முடியாது.

குற்றவியல் பிரேரணை தொடர்பில் சட்ட மற்றும் வங்கித்துறை நிபுணர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு அவர்களின் தராதரம் பாராது தண்டனை வழங்கப்படும்.

நீதிமன்றத்தை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தியதில்லை. குற்றச்செயல்கள் தொடர்பில் நீதிமன்ற வட்டாரத்திலிருந்தே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

நாட்டை மீளக் கட்டியெழுப்பி அபிவிருத்தி பாதையில் நகரும் போது இவ்வாறான அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# கறவை மாடுகள் இறக்குமதியில் 7500 இலட்சம் ரூபா மோசடி

## தேசிய சங்க சபை குற்றச்சாட்டு

பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 500 கறவை மாடுகள் கடந்த வாரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதன்போது 7ஆயிரத்து 500 இலட்சம் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளதாக தேசிய சங்க சபையின் நிதிச்செயலாளர் தின்னியாவல பாலித தேரர் தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் இறக்குமதி செய்யப்பட்ட கறவை மாடுகள் பால் கறக்காது. ஏனென்றால் அந்த மாடுகள் சினை மாடுகளாகவே நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதிலும் மாடுகள் பல நோய்வாய்ப்பட்டுள்ளன. நாட்டில் இருந்த மாடுகளை கொன்று குவித்து விட்டு இறக்குமதி செய்வதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை.

ஆயிரத்து 500 கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் மாடுகளை இறக்குமதி செய்ததன் மூலமாக பல இலட்சம் ரூபா ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது. பொது கணக்குகள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் 259 நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. (அ-2)



ரிசானா நபீக்கின் குடும்பத்திற்கு சவுதி அரேபிய இளவரசியின் சட்ட ஆலோசகர் யஹ்யா பின் அப்துல் அஸீஸ் அர் ராஹீத் நிதியுதவி வழங்கியுள்ளார். காத்தான்குடிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் 10 இலட்சம் ரூபா பணத்தை வழங்கி வைத்ததைப் படத்தில் காணலாம்.

# நாடளாவிய ரீதியில் மொழிப்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன

இந்த வருடத்தில் நாடளாவிய ரீதியாக நூற்றுக்கும் அதிகமான மொழிப்பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. இதன் மூலம் நாடளாவிய ரீதியாக பணியாற்றும் 14 இலட்சம் அரச பணியாளர்களின் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழியறிவு மேம்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை பொது நிர்வாகத்துறை அமைச்சும் தேசிய மொழி அமைச்சும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அரச ஊழியர்கள் நாட்டின் எந்த பகுதியிலும் பணியாற்ற வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளதனால் அவர்களுக்கு மூன்று மொழிகளிலும் உரிய தேர்ச்சி இருக்க வேண்டும் என பொது நிர்வாகத்துறை அமைச்சர் டிபிள்யூ டீ.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பொதுமக்களுக்கான சேவையினை திறமையுடன் மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட தொழிற்சங்க முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையிலான வேதனம் தொடர்பாக கைச்சாத்தான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடைகின்றது.

இந்நிலையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான புதிய ஒப்பந்தம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கைச்சாத்தாகவுள்ளது. அதேவேளை முதலாளிமார் சம்மேளனம் செயலமர்வு ஒன்றினை எதிர்வரும் 20 ஆம் திகதி நுவரெலியாவில் நடத்த திட்டமிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானா இனி எதற்காகவும் அழமாட்டாள்!

இவ்விவகாரம் சர்வதேச அளவில் பேசப்பட ஆரம்பித்த பின்னர் இலங்கை அரசாங்கம் இவ்விடயத்தில் கூடிய கவனம் காட்ட ஆரம்பித்தது .

அப்போது பிரதி வெளிவிவகார அமைச்சராக இருந்த ஹுசைன் பைலா தலைமையில் ரிஸானாவின் பெற்றோர் சவூதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் பிறகு- ரிஸானாவின் தந்தை பலமுறை எஜமானருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

2006 இல் ஒரு தடவையும் இவ்வாரத்தில் ஒரு தடவையுமாக இலங்கை ஜனாதிபதி 2 தடவைகள் ரிஸானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு சவூதியைக் கோரியிருந்தார்.

இதுதவிர தனது சவூதி பயணத்தின் போது ரிஸானாவின் விடுதலையை வலியுறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

சர்வதேச மனித நேய செயற்பாட்டாளர்கள் அனைவருமே இவரது விடுதலைக்காக இடைவிடாது குரல் கொடுத்தனர். வழக்கிற்காகவும் ஏனைய சட்ட ஆலோசனைகளுக்காகவும் இலங்கை அரசாங்கத்தை விட அதிகளவான தொகையை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகள் செலவிட்டன.

இலங்கையும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டது.

வீட்டில்இருந்துகொண்டுஅறிக்கை விடும் முஸ்லிம் அரசியல்தலைவர்களைப் போலன்றி, ரிஸானாவின் நலனில் எந்நேரமும் அக்கறை செலுத்தி, அடிக்கொரு தடவை தவாத்மி சிறைக்குச் சென்று அவரைப் பார்த்து வந்தவர் பல்வைத்தியரான கிபாயா இப்திகார் தான். இவர் இல்லாவிட்டால் உலகுக்கு பல செய்திகள் மறைக்கப்பட்டிருக்கும்.

இலங்கையைச் சேர்ந்த இவர் தானிருக்கும் இடத்திலிருந்து பலநூறு கிலோமீற்றர் பயணம் செய்து சிறைக்கு செல்வார். அப்போதெல்லாம் இலங்கைக்கு தொலைத்தொடர்பை ஏற்படுத்தி பெற்றோருடன் ரிஸானாவை பேச வைப்பார். ரிஸானாவின் உயிர் பறிக்கப்படுவதற்கு முன்னர் அவரை கடைசியாகப் பார்த்த நம்மவரும் கிபாயாதான்.

**மறுக்கப்பட்ட நியாயங்கள்**

சவூதி அரேபிய சட்டத்தின் முன்னால் ரிஸானாவின் பக்கமுள்ள நியாயங்கள் அச்சொட்டாக எடுத்துரைக்கப்படவில்லை. அதற்கான சந்தர்ப்பமும் ஆரம்பத்திலிருந்தே அவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை என்பதுதான் அழுத்தமாக உரைக்கப்பட வேண்டிய விடயம்.

குழந்தைக்கு புரையயேறியது அல்லது மூச்சுத்திணறியே உயிர் பிரிந்துள்ளது என்று சொல்லுமளவுக்கு அரபுச்சொற்கள் ரிசானாவுக்கு தெரிந்திருக்கவில்லை. அவள் என்ன சொல்கிறாள் என்பதைக் கேட்பதற்கு எஜ



மானி தயாராக இருக்கவில்லை. உண்மையாகவே கொலை செய்துவிட்ட ஒரு கொத்தடிமையைப் பிடித்துக் கொடுப்பதுபோல் அவள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்ந்தபோது பொலிசாரினால் வற்புறுத்தலின் பேரிலேயே ரிஸானாவின் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை தெரிய வந்தது. இது ஷரீஆ சட்டங்களையே மீறுகின்ற நடைமுறை என்பதை சுட்டிக்காட்டியும் இதுவிடயத்தில் தலையிடுமாறு கோரியும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்த ஆணைக் குழு முன்வைத்த கோரிக்கையும் கண்டு கொள்ளப்படவில்லை.

அடுத்து நீதிமன்றத்தில் ரிஸானா தமிழில் தான் தம்பக்க நியாங்களை எடுத்துக் கூறினார். இதனை இந்தியாவைச் சேர்ந்தவரும் தொழில் ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளரில்லாதவருமான ஒரு நபரே மன்றுக்கு மொழி பெயர்த்துள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த இவரது மொழி பெயர்ப்பில் மாறுபட்ட தன்மை காணப்படுவது பின்னர் தெரியவந்தது. அப்போது இது தொடர்பில் விசாரிப்பதற்காக அந்த மொழி பெயர்ப்பாளரை தேடிய போதும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

1988ஆம்ஆண்டுபிறந்த ரிஸானா 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி பிறந்தவரென போலித் தகவல்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டது இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டது. இதனடிப்படையில் அவரை வெளி நாட்டிற்கு அனுப்பிய முகவர்களுக்கு இலங்கை நீதி மன்றால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டபோதும், சவூதி நீதிமன்றமோ சட்ட கட்டமைப்போ கடவுச்சீட்டில் இருக்கின்ற திகதியையே கவனத்தில் எடுத்துக்கொண்டது. இவ்வாறான விடயங்கள் பிரதிவாதியின் தரப்பை தொடர் தோல்விகளின்பால் இட்டுச்செல்வதாகவே அமைந்தது.



**கரையாத கல்மனது**

கடைசியாக ஒரு சிறு நம்பிக்கை துளிர்விட்டது. மரணித்த குழந்தையின் பெற்றோரது மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுதான் அது.

இதற்காக எல்லோரும் பாடுபட்டனர். ஜனாதிபதி கடிதம் எழுதினார். சவூதி மன்னர் வேண்டிக் கொண்டார். ரிஸானா மன்றாடினார். அவரது தந்தை கெஞ்சிக் கூத்தாடினார். அரசியல் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர். மனித உரிமை அமைப்புகள் குறிப்பாக ஆசியமனிதஉரிமைகள்ஆணைக் குழு நூற்றுக்கணக்கான கோரிக்கைகளை தினமும் முன்வைத்துக் கொண்டே இருந்தது.

ஆனால், அல் ஒடைபி எனும் வீட்டு எஜமானும் அவனது மனைவியும் இது எதனையும் பொருட்படுத்தவில்லை. உண்மை யாகச் சொல்வதானால், தங்களுக்கு இன்னுமொரு குழந்தை பிறந்து விட்டபோதிலும் இதுபற்றி பேசுவதற்குக் கூட அவர்கள் விரும்ப வில்லை. ஷரீஆ சட்டத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு பழி தீர்ப்பதிலேயே குறியாக இருந்தனர்.

**அந்தக் கணங்கள்**

2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக சவூதி உள்துறை அமைச்சு காத்திருந்தது. இரத்த உறவு இழப்பீட்டிற்கான நட்ட ஈட்டையேனும் பெற்றுக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்த எஜமானும் எஜமானியம்மாளும் கடைசி வரையும் தமது பிடிவாதத்தில் இருந்து இம்மியளவும் இறங்கி வரவில்லை என்பதை நினைக்கிற போது நெஞ்சு கனக்கிறது. இந்நிலையிலேயே டாக்டர் கிபாயா இப்திகார் இரு தினங்களுக்கு முன்னர் ரிஸானாவைச் சந்திக்கச் சென்றிருந்தார். அப்போது ரிஸானாவுக்கு அவரது குடும்ப புகைப்படத்தை காண்பிக்குமாறு சிறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனைக் கேட்ட டாக்டருக்கு உள்மனது ஏதோ சொன்னது. அதனாலேயே ரிஸானாவுக்காக பிரார்த்திக்குமாறு அவர் பகிரங்க அழைப்பு விடுத்தார். இலங்கையில் இருந்து புகைப்படத்தை தருவித்து அதனை காட்டுவதற்காக புதன்கிழமை நேர காலத்துடன் தவாத்மி சிறைக்கு கிபாயா சென்றிருந்தார். ஆனால், அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஒடைபியின் குடும்பம் ரிஸானாவை விடுதலை செய்வதற்கு விரும்பவில்லை என்பதை கருதியோ என்னவோ சவூதி உள்துறை அமைச்சு ஒரு முடிவுக்கு வந்தது. உலகமே கொந்தளித்துக் கொண்டிருக்க மிகச் சுலபமாக சட்டத்தை நடைமுறைப் படுத்த தீர்மானமெடுத்தார் உள்துறை அமைச்சரான இளவரசர் நயீப் பின் அப்துல் அஸீஸ்.

அதிகமாக வெள்ளிக் கிழமைகளிலேயே மர தண்டனை நிறைவேற்றப்படுவதுண்டு. ஆனால், ரிஸானாவுக்கு புதன்கிழமை யென நாள் குறிக்கப்பட்டது.

18 வயதுக்குட்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது சட்விரோதமானது என்ற சிறுவர்களுக்கான சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட்டிருந்த சவூதி அரேபியா, கடவுச்சீட்டின் பிறப்புத் திகதியை மட்டும் அடிப்படையாகக்கொண்டு தீர்ப்பை நிறைவேற்றத் துணிந்தது.

**உள்ளூர் நேரப்படி முற்பகல் 11.40 (இலங்கை நேரப்படி பிற்பகல் 02.10) மணிக்கு ரிஸானாவின் உயிரற்ற உடல் நிலத்தில் சாய்ந்தது.**

சவூதி அரேபியாவே கனவென்றிருந்த எங்கள் ரிஸானாவின் உயிர் பறிக்கப்பட்டது.



உலகெங்கும் வாழும் கோடான கோடி மக்கள் மரித்துப்போயினர்.

இந்தச் செய்தி, ரிஸானாவின் தாய்க்கு முதன்முதலாக சொல்லப்பட்டபோது அவர் பேசிய வார்த்தை-"மகன் எண்ட மகள மௌத் தாக்கி விட்டாங்களா...?" என்பதுதான். ஷரீஆ சட்டமென்பது இறைவனால் அருளப்பட்டது. நபிகள் நாயகத்தினால் உலகுக்கு முன்மொழியப்பட்டது. இந்தச் சட்ட ஏற்பாடுகளில் எவ்வித வாதப்பிரதிவாதங்களோ மாற்றுக் கருத்துக்களோ இல்லை.

இந்தச் சட்டத்தில் எல்லாவிடயங்களும் மிகவும் நுணுக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ரிஸானா தனது தரப்பு நியாயங்களை முன்வைப்பதில் எவ்வாறான தடைகளை எதிர்கொண்டார் என்பது நமக்குத் தெரியும். சவூதி சட்டத்தை நடமுறைப்படுத்து வோரினால் இவர் கையாளப்பட்ட விதம் எந்தளவுக்கு நேர்மையானதென்பதில் சந்தேகங்கள் இருக்கின்றன.

எவ்வாறிருப்பினும் , நீதி மன்றுக்குத் தேவை மனச்சாட்சியல்ல, சாட்சியங்களே என்ற அடிப்படையில் நோக்குகையில், ஷரீஆ சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பினை விமர்சிக்க முடியாது.

ஷரீஆ சட்டத்தின் கீழ்மரண தண்டனை விதிக்கப்பட்டாயிற்று. அந்த தீர்ப்பை மாற்ற முடியாது என்பது உண்மைதான். ஆனால், தவறிழைத்த ஒருவருக்கு மன்னிப்பு அளிப்பது பெரும்பாவம் என்று இஸ்லாத்திலோ அல்லது அந்த சட்டத்திலே எங்கும் சொல்லப்படவில்லை என்பதே அழுத்தமாக உரைக்கப்படவேண்டியது. இந்த அப்பாவிச் சிறுமி, 18 நாட்களே தங்களது வீட்டில் வேலை செய்திருந்த நிலையில் பச்சிளங்குழந் தையை ஏன் வலிந்து கொலை செய்யவேண்டும் என்று எஜமானர்கள் ஒருகணம் சிந்தித்திருக்க வேண்டும்.

பணம் உழைப்பதற்காக வெளிநாடு சென்ற தன்னால், தாயாருக்கு எதனையும் அனுப்ப முடியவில்லை என்ற மனவருத்தத்தில், சிறையில் இருந்தவாறே தன் கையால் போர்வை ஒன்றை நெய்து தனது தாய்க்கு அனுப்பிவைத்த பிள்ளையா... கொலை செய்திருக்கப்போகின்றது.

சரி அப்படித்தான் கொலை செய்திருந்தாலும் 7 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து விட்டானள்தானே என மன்னித்து விட்டிருக்கலாம். இவ்வாறு ரிஸானாவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு ஓரிரு நாட்களல்ல 7 வருடங்கள் கால அவகாசம் இருந்தது.

தனது பெற்றோரைச் சிறையில் சந்தித்து போது "உம்மா என்னக் கூட்டிட்டுப்போகவா வந்திருக்கயள்? என்ன எப்படியாவது நாட்டுக்கு கூடிட்டு போங்கம்மா" என்று கூறி கழுத்தைக் கட்டிக்கொண்டு கத்திய ரிஸானா, மறைமுக இடமொன்றில் கழுத்தறுபட்டுப் போனாள்.

தனது குடும்பத்தைப் பார்ப்பதுதான் அவளது கடைசி ஆசையாக இருந்திருக்கும். ஆனால், புகைப்படம்கூட அவளுக்கு காண்பிக்கப்படவில்லை என்பது உண்மையாக இருக்குமானால், அந்த ஆசை கூட நிறைவேற்றப்படாமல் சட்டம் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஒன்று மட்டும் நிச்சயம்- பிழைப்புத் தேடிப்போனவளின் உயிர் வாழ்தலுக்கான மிகக் குறைந்தபட்ச மன்றாட்டத்திற்கு கூட மனமிரங்காத எஜமானியதும் அவரது கணவனதும் உள்ளத்தை கல்லாகப் படைத்த இறைவன் மீது சத்தியமாக....ரிஸானா இனி எதற்காகவும் அழமாட்டாள்!

-ஏ.எல்.நிப்ராஸ்-புதினம் நியூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்காலம் முடிந்தமையாலே சவுதிக்கான இல.தூதுவர் அழைக்கப்பட்டார்

இலங்கையரசின் பலதரப்பட்ட வேண்டுகோள்களையும் மீறி சவுதி அரேபியாவில் பணிப்பெண் ரிஸானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதையடுத்து அந்நாட்டுக்கான தூதுவர் அஹமட் ஜவாத் உடனடியாக திருப்பியழைக்கப்பட்டிருந்தார்.

சவுதி அரேபியாவிற்கு தமது அதிருப்தியை தெரிவிக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அஹமட் ஜவாதின் பதவிக்காலம் கடந்த டிசெம்பர் மாதத்துடனே நிறைவடைந்து விட்டதாகவும் அதன் காரணமாகவே அவர் திரும்பி அழைக்கப்பட்டதாகவும் வேறு சில தகவல்கள் தெரிக்கின்றன.

இந்நிலையில் சவுதி அரேபியாவிற்கு புதிய தூதுவரொருவர் கூடிய விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்பணிப்பெண்ரிஸானா நபீக் சவுதி அரேபியாவில் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் சவுதியுடனான இராஜதந்திர உறவுகள் பிரிவினைகளின்றி முன்னெடுக்கப்படுவதாக வெளியுறவுகள் துறை அமைச்சின் தொடர்பு பணிப்பாளர் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவரது மரணத்தைத் தொடர்ந்து சவுதிக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்பும் எண்ணத்தை கைவிடவில்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தற்போது சவுதியில் உள்ள இலங்கை பணியாளர்களின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் உறுதிப்படுத்தப்படாமல் இவ்வாறு எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சவுதி அரேபியாவிற்கான புதிய தூதுவர் ஒருவர் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் தற்போது நான்கு இலட்சம் அதிகமான இலங்கையர்கள் சவுதி அரேபியாவில் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# நீதிமன்றத்துடனான முரண்பாட்டுக்கு அரசியலமைப்பே காரணம்-சமல்



அரசியலமைப்பின் குறைபாடுகள் காரணமாக அழுத்தங்களை எதிர்நோக்க நேரிட்டது என சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

காலி பெலிஹா சந்தியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில், நீதிமன்றிற்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நடாளுமன்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமைக்கு அரசியலமைப்பே காரணம்.

அரசியலமைப்பின் குறைபாடுகளினால் சபாநாயகர் என்ற ரீதியில் சில அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டது. அரசியலமைப்பு உடனடியாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பெற்றோர் மன்னிக்காததாலேயே ரிஸானாவுக்கு தண்டனை வழங்கினோம்

## நீதித்துறையில் தலையிட வேண்டாம் என்கிறது சவுதி

ரிஸானா நபீக்குக்கு தமது நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்காக உலக நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளமை தொடர்பில் சவுதி அரேபியா தமது விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

குழந்தை ஒன்றை கொலை செய்தமைக்காகவே ரிஸானாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாக சவுதி அரேபியாவின் பேச்சாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரிஸானா நபீக் பணிப்பெண்ணாக சவுதிக்கு வந்த ஒரு வாரத்தில் இந்தக் கொலை இடம்பெற்றது. கடவுச்சீட்டின்படி ரிஸானா கொலையை மேற்கொண்ட போது அவருக்கு 21 வயதாகும். எனவே, அவர் 17 வயதானவர் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் சிறுமிகள் பணிக்கு அமர்த்தப்படுவதை சவுதி அரேபியா ஏற்றுக்கொள்வதில்லை. சவுதி அரசாங்கம், இறந்து போன குழந்தையின் பெற்றோரை இணங்கச் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. எனினும் அவர்கள் ரிஸானாவை மன்னிக்க வாய்ப்பில்லை என்று அறிவித்து விட்டனர்.

இந்நிலையில் சவுதி அரேபியா அனைத்து விதமான மனித உரிமைகளையும் மதிக்கிறது. எனினும் தமது நாட்டின் நீதித்துறையில் எவரும் தலையிடுவதை ஏற்க முடியாது என்றார். (அ-2)

# பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) முள்ளியவளை பயிற்சி நிலையத்தில் கணனிப் பயிற்சிநெறி, மின் இணைப்பாளர் பயிற்சிநெறி ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கணனி பயிற்சி நெறியும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மின் இணைப்பாளர் பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றிற்கான விண்ணப்பப்படிவங்களை மாங்குளம் வீதி, முள்ளியவளையில் அமைந்துள்ள கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (அ-2)




★ 1559- முதலாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூடினாள்.

★ 1582- லிவோனியா மற்றும் எஸ்தோனியாவை ரஷ்யா போலந்திடம் கையளித்தது.

★ 1609- உலகின் ஆரம்ப கால செய்திப்பத்திரிகைகளில் ஒன்றான Avisa Relation oder Zeitung, ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.

★ 1759- பிரித்தானிய அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.

★ 1777- அமெரிக்க புரட்சிப் போர்: வெர்மொண்ட் விடுதலையை அறிவித்தது.

★ 1799- இலங்கையில் அடிமைகள் கொண்டு வரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

★ 1892- ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்து விளையாட்டு விதிகளை உருவாக்கினார்.

★ 1908- யாழ்ப்பாணத்திற்கும் காரைநகருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவை (ferry) ஆரம்பிக்கப்பட்டது.

★ 1915- மலாவியில் வெள்ளையினக் குடியேற்றத்தை எதிர்த்து யோன் சிலம்புவே தலைமையில் இடம்பெற்ற கிளர்ச்சியில் மூன்று வெள்ளையினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1919- ஜேர்மனியில் இரு சோசலிஸ்டுகளான ரோசா லக்சம் பேர்க், மற்றும் கார்ல் லீப்னெக்ட் ஆகியோர் துணை இராணுவக் குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

★ 1936- முற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட கட்டடம் ஒகைய்யோவில் கட்டப்பட்டது.

★ 1943- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பசிபிக் பெருங்கடல் தீவான குவாடல்கனாலில் இருந்து விரட்டப்பட்டனர்.

★ 1942- பென்டகன் திறக்கப்பட்டது.

★ 1966- நைஜீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அபூபக்கர் டஃபாவா பாலேவாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

★ 1969- சோயூஸ் 5 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் விண்ணுக்கு ஏவியது.

★ 1970- நைஜீரியாவிடம் இருந்து 32 மாத விடுதலைப் போரின் பின்னர் பயாஃப்ரா சரணடைந்தது.

★ 1970- முகமட் அல்-கடாபி லிபியாவின் பிரதமராகத் தெரிவானார்.

★ 1975- போர்த்துக்கல் அங்கோலாவுக்கு விடுதலை வழங்கியது.

★ 1973- வியட்நாம் போர்: வடக்கு வியட்நாம் மீதான தாக்குதல்களை இடைநிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.

★ 2001- விக்கிபீடியா தொடங்கப்பட்டது.

★ 2005- ஈசாவின் ஸ்மார்ட்-1 என்ற லூனார் விண்கலம் சந்திரனில் கல்சியம், அலுமினியம், சிலிக்கன், இரும்பு ஆகியவற்றைக் கண்டு பிடித்தது.

★ 2005- செல்பேசிகளில் தமிழ் குறுஞ் செய்திகளை அனுப்பும் செல்லினம் என்ற மென்பொருள் மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 2007- சதாம் உசேனின் சகோதரர் பர்சான் இப்ராகிம் மற்றும் ஈராக்கின் முன்னாள் பிரதம நீதியரசர் அவாத் ஹமீட் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1866- நேத்தன் சோடர்புளொம், நோபல் பரிசு பெற்றவர் (இ.1931)

★ 1895- ஆர்ட்டுரி வேர்ட்டானென், நோபல் பரிசு பெற்றவர் (இ.1973)

★ 1908- எட்வர்ட் டெல்லர், ஹங்கேரியில் பிறந்த அமெரிக்க இயற்பியலாளர், ஐதரசன் குண்டின் தந்தை (இ.2003)

★ 1923- ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை (இ.1978)

★ 1926- காசாபா தாதாசாகேப் சாதவ், இந்திய ஒலிம்பிக் வீரர் (இ.1984)

★ 1929- மார்ட்டின் லூதர் கிங், அமெரிக்க கறுப்பினத் தலைவர் (இ.1968)

★ 1956- மாயாவதி குமாரி, இந்திய அரசியல்வாதி

### இறப்புக்கள்

★ 1919- ரோசா லக்சம்பேர்க், ஜேர்மனிய சோசலியவாதி (பி.1870)

★ 1981- தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (பி.1902)

★ 1998- குல்சாரிலால் நந்தா, 2 ஆவது இந்தியப் பிரதமர் (இ.1898)

★ 2008- கே.எம். ஆதிமூலம், வியர் (பி.1938)

### சிறப்பு நாள்

★ விக்கிபீடியா தினம்

### மார்ட்டின் லூதர் கிங்



மர்ட்டின் லூதர் கிங் 1929 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவில் பிறந்தார். இவர் ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க அமெரிக்கத் தலைவர் ஆவார்.

பாப்திசுதப் போதகராக இருந்த கிங், தனது இளமைக்காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார்.

1964 ஆம் ஆண்டில் இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் சுதந்திரத்திற்கான ஜனாதிபதி விருது 1977 ஆம் ஆண்டும் 2004 ஆம் ஆண்டு காங்கிரஸ்சிற்கான தங்கப் பதக்கமும் இவருக்கு வழங்கப்பட்டது.

மறைவு

இவர் 1968 ஏப்ரல் 4 ஆம் திகதி டென்னசி மாநிலத்தில் மெம்பிஸ் நகரில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இறக்கும் போது இவருக்கு 39 வயதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான உணவு பழக்கவழக்கம் உடல் ஆரோக்கியத்தை பேண உதவும்



எம்மிடம் இருக்கின்ற சில தவறான உணவு பழக்க வழக்கங்களால் நாம் நம்மை அறியாமலேயே பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றோம். அது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக இருக்கின்றது. நாம் உணவு உண்ணும் வேளையில் விடுகின்ற சிறு சிறு தவறுகள் எமது உடலில் பாரிய பல விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. அவை என்னென்ன என்பதை நாம் ஓர் ஒழுங்கு முறையில் பார்ப்போம்.

இன்றெல்லாம் அலுமினிய பாத்திரங்களில் சமைப்போரின் தொகை அதிகரித்து விட்டது. எமது உணவுக் கலாசாரத்தின் படி அலுமினிய பாத்திரத்தில் சமைப்பது உடலுக்கு ஏற்றதொன்றல்ல. காரணம் எமது உணவில் நாம் அதிகமாக தக்காளி , தேசிக்காய், புளி போன்ற புளிப்பு சுவை நிறைந்த சேர்மானங்களை அதிகமாக சேர்த்து சமைப்பது வழக்கம்.

இவ்வாறு உணவில் சேர்க்கப்படும் இப்புளிச்சுவையுடைய சேர்மானங்களில் இயல்பாகவே அசிட் தன்மையும் மிகவும் அதிகமாகவே காணப்படுகின்றது. நாம் அலுமினிய் பாத்திரங்களைக் கொண்டு சமைக்கின்ற போது இப்புளிப்பு சேர்மானங்கள் அலுமினியப் பாத்திரத்தோடு தாக்கமடைந்து நாம் சமைக்கும் உணவுப் பொருட்களுடன் சேர்ந்து எமது உடலினுள் செல்கின்றது.


எமக்குத் தெரியாமலேயே உணவுப் பொருட்கள் உடலினுள் இது செல்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

✷ உணவுக் கால்வாய் பகுதிகளில் புற்று நோயினை ஏற்படுத்துகின்றது.

✷ சிறுநீரக கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது.

எனவே அலுமினியப் பாத்திரங்களில் சமைப்பதை நாம் தவிர்த்துக் கொண்டு தொண்டு தொட்டு நாம் பயன்படுத்தி வந்த மட்பாண்டப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் இதுபோன்ற உடலியல் பாதிப்புக்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி இப்போ




தெல்லாம் எம்மில் பலரும் சாப்பிட்ட பின்னும் அல்லது சாப்பிடும் போதும் மென்பானங்களை குடிப்பது தவிர்க்க முடியாததொரு பழக்கமாக புழக்கத்தில் இருந்து வருகின்றது.. இதுவும் உடலுக்கு பெரும் தீங்கினையே ஏற்படுத்துகின்றது.

இதனால்... நாம் உண்ணும் உணவுகளில் உள்ள விற்றமின்கள் உடலுக்குள் அகத்துறிஞ்சப்படாமல் வீணாகி விடுகின்றது. ஆகவே எவ்வளவு சத்துள்ள உணவை நாம் சாப்பிட்டாலும் அதன் முழுமையான போசாக்கு எமது உடலுக்கு கிடைக்காமல் போகின்றது.

அத்துடன் மென்பானங்களில் இருக்கும் அசிட் தன்மை தொண்டை வழியாகவே வெளியேறும். இதனால் தொண்டை முதல் இரைப்பை வரைக்குமான பகுதிகளில் அரிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கின்றது. இது பின்னாட்களில் தொண்டைப் பகுதிகளில் காயங்களை ஏற்படுத்தி தொண்டைப் புற்று நோயினைக் கூட ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது.

எனவே இதனை தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் சாப்பிட்டவுடன் தண்ணீரை அருந்த வேண்டும். தண்ணீரை அருந்துவதனால் எமது உடலுக்கு எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படப்போவதில்லை. அத்தோடு தண்ணீரை உபயோகிக்கின்ற போது நாம் உண்ணும் உணவில் இருக்கும் அத்தனை சத்துக்களும் கனியுப்புக்களும் முழுமையாக உடலுக்குள் அகத்துறிஞ்சப்படுகின்றன. இதனால் உணவின் பூரணத்தை எமது உடல் பெற்றுக் கொள்கிறது.

அடுத்ததாக இப்போதெல்லாம் குளிர்சாதனப் பெட்டிகளை பயன்படுத்துவோரின் தொகையும் அதிகரித்து விட்டது. இவர்கள் தங்களின் வேலைகளை இலகுவாக்கிக் கொள்ளவும் நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளவும் மரக்கறி மற்றும் பழ வகைகளை அதிகமாக வாங்கி குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைத்துக் கொள்கின்றனர்.



பொதுவாக அறுவடை செய்த மரக்கறிகள் மற்றும் பழ வகைகளைப் பொறுத்த மட்டும் அவை பெரும்பாலும் 3 நாட்களே முழுமையான விற்றமின்களுடன் இருக்கும். 3 நாட்களின் பின்னர் அவை கொஞ்சம் கொஞ்சமாக விற்றமின்களையும் கனிப்பொருட்களையும் நீர்ச்சத்தினையும் இழக்க ஆரம்பித்துவிடும்.

எனவே 3 நாட்களுக்கும் அதிகமாக சமைப்பதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

எனவே குறிப்பிட்ட தினத்திற்கு தேவையான மரக்கறி வகைகளையும் பழ வகைகளையும் குறித்த தினங்களிலேயே வாங்கி சமைப்பதே மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அவ்வாறு முடியாதவர்கள் வாங்கி வைத்த மரக்கறிகளை பெரும்பாலும் 3 நாட்களுக்குள் சமைத்து முடிப்பதே மிகச் சிறந்த வழிமுறையாகும்.

இவ்வாறுஉணவுஉட்கொள்ளும்போதுநாம் விடுகின்ற சிறு சிறு தவறுகளால் எமது உடலில் ஏற்படும் சிறிய விளைவுகள் எதிர்காலத்தில் பாரிய நோய்களைத் தோற்றுவிப்பதற்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றது.

எனவே, இவ்வாறான பழக்க வழக்கங்களைத் தவிர்த்துக் கொள்வது எமது ஆரோக்கியமான வாழ்க்கைக்கான அடிப்படையாக அமையும். அத்துடன் நாம் தொண்டு தொட்டு கடைப்பிடித்துக் கொண்டு வந்த உணவுப் பழக்கவழங்கங்களை தொடர்ந்தும் பேணி வந்தாலே போதும் எமது உடலை நாம் கட்டுக்கோப்பாக பேணக்கூடியதாக இருக்கும். அதனை விடுத்து புதிய கலாசார பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக வெறுமனே நாம் நோய்க்கு ஆளாகாமல் எம்மை பாதுகாத்துக் கொள்வதானது எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. எனவே முறையான உண்வுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து நாம் ஆரோக்கியமாக வாழ்வதுடன் எமது வருங்கால சந்ததிக்கும் அதனைப் பயிற்றுவிப்போம்.

# பொதுநலவாய கொள்கைகளை அரசு முழுமையாக அமுலாக்க வேண்டும்

## கனடா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் கொள்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென கனடா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக மனித உரிமை, சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம் உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கை பூரணமாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டுமென கனேடிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அமான்டா ரெய்ட் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் பின்பற்றப்படாவிட்டால் எதிர் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கனடா பங்கேற்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், ஜனநாயக பெறுமதிகள், அரசியல் நல்லிணக்கம் போன்றன தொடர்பில் இலங்கை கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட யோசனைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென ரெய்ட் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# முஸ்லிம் பிரதேச செயலகங்களுடன் தமிழ் பிரதேசங்கள் இணைப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் யோகேஸ்வரன் எம்.பி.

தமிழ் பிரதேசங்களை முஸ்லிம் பிரதேச செயலகத்துடன் இணைக்கும் அரசின் சதி எம் இனத்தின் மௌனத்தை சீண்டிப்பார்ப்பதாகும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


எந்த ஒரு முன்னறிவித்தலும் இன்றி இன்றையதினம் அரச தரப்பு அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மாகாணசபை உறுப்பினர்களையும் மட்டு.மாவட்ட செயலகத்தில் ஒன்றுகூட்டி கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அமீரலியின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த இவ் அரசு எடுத்த நிகழ்ச்சித்திட்டமானது நயவஞ்சக செயற்பாடாகும்.


அத்துடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களோ மாகாண சபை உறுப்பினர்களோ அழைக்கப்படாமை தமிழ் இனத்தின்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் திட்டமிட்ட சதியாகும்.

இந்தியாவிற்கு ஆன்மீக யாத்திரை சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸுடன் தொலைபேசி வாயிலாக தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளதுடன் பொது நிர்வாக அமைச்சருக்கு இந்நடவடிக்கையை கைவிடும்படியும் அல்லது பாரிய அளவில் எமது மாவட்டம் தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என தொலைநகல் வாயிலாக தனது ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இராணுவத்தினரின் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று ஆனையிறவு பகுதியில் இடம்பெற்றது.

இதில் இலங்கை இராணுவத்தளபதி லெப்டினல் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் .

(படங்கள்:- எஸ்.ஆர் கரன்)

# மோ.சைக்கிளுடன் விபத்து; இருவர் படுகாயமடைந்தனர்

பயணிகளை ஏற்றுவதற்காக நின்ற தனியார் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பரந்தன் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்து கொண்டிருந்த தனியார் பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக பரந்தன் சந்தியில் தரித்து நின்றவேளை கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பரந்தன் வீதி கிளிநொச்சியைச் சேர்ந்த காண்டீபன் (வயது 25), உருத்திரபுரத்தைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (அ-3-259)

# இலங்கையில் கடந்த ஆண்டு 192 எயிட்ஸ் நோயாளிகள்

இலங்கையில் 1987ஆம் ஆண்டின் பின்னர் கடந்த ஆண்டு அதிகூடிய எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு 192 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சின் பாலியல் நோய்ப்பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டில் பதிவான எயிட்ஸ் நோயாளிகளில் அதிகமானவர்கள் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 118 ஆண்களுக்கு எயிட்ஸ் நோய் தொற்று பரவியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோய்த் தொற்று பரவும் வேகம் அதிகரித்துள்ளதாக டாக்டர் லிலானி தெரிவித்துள்ளார். (அ-2)

# கொழும்பில் உள்ள உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பில் கவனம்

கொழும்பு நகரில் இரவு வேளைகளில் மாத்திரம் தற்காலிகமாக நடத்திச் செல்லப்படும் உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பில் கொழும்பு மாநகர சபை கவனம் செலுத்தியுள்ளது.

குறித்த உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு கூறியுள்ளது.

குறிப்பாக இந்த விற்பனை நிலையங்களில் உரிய தரத்தில் உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எதிர்வரும் காலங்களில் இந்த விற்பனை நிலையங்களில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அசுத்தமான முறையில் உணவுகளை விற்பனை செய்யும் நிலையங்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-2)

# புத்தர் கூறிய போதனையில் நாட்டை நிர்வகிப்பேன் - சரத்

புத்தர் கூறிய போதனையில் நாட்டை நிர்வாகம் செய்யும் யுகத்தை ஏற்படுத்த தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தர்மத்துக்கு முன்னுரிமை வழங்கும் யுகத்தை எதிர்பார்ப்பதாகவும் நாடு தற்போது அழிவுப் பாதையில் செல்கின்றது. இவை அனைத்தையும் சரியான பாதையில் கொண்டு செல்ல நாங்கள் எந்த அர்ப்பணிப்பையும் செய்ய தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் நாட்டிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்கவில்லை. நாட்டிற்கு ஏதாவது செய்வதே எங்கள் நோக்கமாக உள்ளது என்றார். (அ-2)

# பாக். படை துண்டித்த இராணுவ வீரரின் தலையை தாருங்கள்

## தாயும் மனைவியும் கோரிக்கை

பாகிஸ்தான் இராணுவத்தினரால் தலை துண்டித்து கொல்லப்பட்ட இந்திய வீரரின் தலையை ஒப்படைக்குமாறு வீரரின் மனைவி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதால் அவரது தலையை தேடும் முயற்சி நடந்து வருகிறது.

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தின் எல்லைக்கட்டுப்பாட்டுக்கோடு அருகே கடந்த 8ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி புகுந்து ஹேம்ராஜ், சுதாக்ரசிங் ஆகிய இரு வீரர்களை கொலை செய்தனர்.

அவர்களில் ஹேம்ராஜ்(32) என்ற வீரரின் தலையை துண்டித்து சென்றனர். இதனால் இந்தியா-பாகிஸ்தான் இடையே எல்லையில் பதட்டம் நிலவி வருகிறது.

இந்நிலையில் ஹேம்ராஜ் மனைவி தர்மாவதி, தாயார் மீனாதேவி ஆகியோர் உயிரிழந்த ஹேம்ராஜ் தலையை கண்டுபிடித்து தங்களிடம் காண்பிக்க வேண்டுமெனவும் அவரது முகத்தினை பார்க்க வேண்டுமெனவும் கோரி உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இதுகுறித்து தாயார் மீனாதேவி கூறுகையில், உயிரிழந்தது எனது மகன்தானா என எனக்கு இன்னும் தெரியவில்லை. உடலை மட்டும் காண்பித்தனர். ஆனால் தலையை காட்டவில்லை.

எனவே எனது மகனின் தலையை இராணுவத்தினர் கண்டுபிடித்து எங்களிடம் காண்பிக்க வேண்டும். அதுவரை நாங்கள் உண்ணாவிரதத்தினை கைவிடமாட்டோம் என்றார். (அ-2)

சாவகச்சேரி நகர் புராதன தான்தோன்றீஸ்வரர்
ஏகாதச தின
சிவன் மஹோற்சவ பெருவிழா
பழைய சிவன்
15.01.2013



சிவனடியார்களே!
சாவகச்சேரி நகரில் பழைமையும் பெருமையும் புகழும் அருளும் நிரம்பிய வாரிவனேஸ்வர ஆலயத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் வாரியப்ப சுவாமிக்கு பல ஆண்டுகளுக்கு பின்னதாக கும்பாபிஷேக அருளுடன் முதன் முறையாக மஹோற்சவப் பெருவிழா கும்பாபிஷேக தினமாகிய தை திருவாதிரை நன்னாளைத் தீர்த்தமாகக் கொண்டு நிகழும் மங்களமிகு நந்தன வருடம் தை மாதம் 3 ஆம் நாள் (15.01.2013) செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணிக்கு கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நிகழ்வுற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு தொண்டுகள் பல செய்தும் தரிசித்தும் அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

சாந்தி வழிபாடு : 14.01.2013 தை 01 திங்கள் மாலை 5.00
கொடியேற்ற விழா
தை 2ஆம் நாள் 15.01.2013 செவ்வாய்க்கிழைம காலை 11.30 மணி
தேர்த்திருவிழா
தை 11ஆம் நாள் 24.01.2013 வியாழக்கிழமை காலை 10.30 மணி
தீர்த்தத் திருவிழா
தை 12ஆம் நாள் 25.01.2013 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி
(திருவாதிரை-கும்பாபிஷேக தினம்)

கிரியாகால விபரம்
- தினசரி காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை
- மாலை 3.30 மணி முதல் 6.30 மணி வரை நிகழ்வுறும்
- 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை (அன்னதான) நடைபெறும்

பிரதம குரு: கலாநிதி
து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P
(விளைவேலி)

இங்ஙனம்
கார்த்திகேசு, அருளம்பலம், இ.கருணாகரன் (தர்மகர்த்தா)
இ.பாஸ்கரன் (உதவி தர்மகர்த்தா)
(1485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லையில் பரஸ்பரம் துப்பாக்கி மோதல்

இந்தியா-பாகிஸ்தான் இராணுவ வீரர்களிடையே நேற்று முன்தினமிரவு கடுமையான துப்பாக்கிச் சமர் நிகழ்ந்துள்ளது.

ஜம்மு- காஷ்மீர் பூஞ்ச் மாவட்டம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் சிலர் இந்தியாவுக்குள் நுழைய முயன்றதையடுத்து அவர்களைத் தடுக்கும் முயற்சியில் இந்திய வீரர்கள் ஈடுபட்டனர்.

இதையடுத்து இந்திய வீரர்களை திசை திருப்புவதற்காக பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதற்கு பதிலடி தரும் வகையில் இந்திய வீரர்களும் துப்பாக்கியால் சுட்டனர்.

இருதரப்புக்கும் இடையிலான மோதல் நீண்ட நேரம் நீடித்தது. இரவு 9.45 மணிக்கு ஆரம்பமான துப்பாக்கி மோதலால் அப்பகுதியில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது.

இந்த துப்பாக்கி மோதலில் ஏற்பட்ட உயிரிழப்பு அல்லது காயமடைந்த வீரர்களின் எண்ணிக்கை குறித்த தகவல்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (அ-5)

## இந்தியாவிற்குள் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சி

எச்சரிக்கிறது புலனாய்வுத்துறை

இந்தியாவுக்குள் ஊடுருவ பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதியில் 2,500 பயங்கரவாதிகள் காத்திருப்பதாக புலனாய்வு நிறுவனங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

பாகிஸ்தானில் 42 பயங்கரவாதிகள் முகாம்கள் செயற்படுவதாகவும் இவற்றில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 17 முகாம்களும் பாகிஸ்தானில் 25 முகாம்களும் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முகாம்களில் இருந்தே 2 ஆயிரத்து 500 பயங்கரவாதிகள் பயிற்சி பெற்று ஆயுதம் மற்றும் வெடி மருந்துகளுடன் இந்தியாவுக்குள் ஊடுருவக் காத்திருப்பதாக புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து எல்லையில் இந்திய இராணுவம் உஷார் படுத்தப்பட்டுள்ளது. (அ-5)

# ஆப்கானில் இருந்து அமெரிக்கா விலகும்

## 2014இல் சாத்தியம் என்கிறார் ஒபாமா

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் போர் அடுத்தாண்டு நல்லதொரு முடிவுக்கு வரும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. இப்படையினர் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அவர்களும் தாக்குதல் நடத்தியதில் வீரர்கள் பலர் பலியாகியுள்ளனர். இதற்கிடையில் ஆப்கானை விட்டு நேட்டோ படைகள் முழுமையாக விலக வேண்டும் என்று தலிபான்கள் மிரட்டல் விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேட்டோ படையில் இருந்து பிரான்ஸ், இங்கிலாந்து வீரர்கள் வாபஸ் பெறுவதோடு அமெரிக்க வீரர்களும் ஏராளமானோர் வாபஸ் பெறப்பட்டனர்

எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இறுதிக்குள் அமெரிக்க படைகளை முற்றிலும் வாபஸ் பெற்று ஆப்கான் பாதுகாப்பு பொறுப்பை அந்நாட்டு இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக இப்போது ஆப்கான் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு அமெரிக்க படைவீரர்கள் பயற்சி அளித்து வருகின்றனர். இந்நிலையில் அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஆப்கான் ஜனாதிபதி கமித் கர்சாயும் ஒபாமாவும் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறுகையில், ஆப்கான் பாதுகாப்பை அந்நாட்டிடமே ஒப்படைக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்தாண்டு இறுதிக்குள் ஆப்கானில் தீவிரவாதத்துக்கு எதிராக நடத்தப்படும் போர் நல்லதொரு முடிவுக்கு வரும்.

ஆப்கானில் இருந்து கணிசமான படைகளை ஏற்கனவே வாபஸ் பெற்றுள்ளோம். இப்போது 66 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் அங்கு உள்ளனர்.

ஆப்கானில் அமைதியை ஏற்படுத்த அந்நாட்டு ஜனாதிபதி கர்சாய் எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. விரைவில் பாதுகாப்பு பொறுப்பை ஆப்கானிடமே விட்டுவிட்டு அங்கிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்வோம் என்று தெரிவித்தார். (அ-5)

# அமெரிக்க அழகியாக மலோரி ஹேகன் தெரிவு



அமெரிக்காவின் லாஸ் வேகாவில் நடைபெற்ற 92ஆவது மிஸ் அமெரிக்க அழகிப் போட்டியில் 23 வயதாகும் மலோரி ஹேகன் வெற்றி பெற்று பட்டம் வென்றார்.

நியூயோர்க்கில் வசிக்கும் மலோரி, சாண்டி புயல் தங்களது ஊரை சூறையாடி இருக்கலாம். ஆனால் தங்கள் வலிமையை அல்ல என்று கூறி அழகிப் பட்டத்தைச் தட்டிச் சென்றார்.

அமெரிக்காவில் நடந்து வரும் துப்பாக்கிச் சூட்டிற்கு பள்ளியில் பாதுகாப்பு படையினரை பணியமர்த்தினால் தீர்வாகுமா என மலேரியிடம் நடுவர்கள் கேட்க, வன்முறைக்கு வன்முறை பதிலாகாது என கூறி அனைவரின் பாராட்டுக்களையும் மலோரி ஹேகன் பெற்றார்.

சுமார் 50 மாகாணங்கள் பங்கேற்ற இந்த போட்டியில் தெற்கு கார்லினாவை சேர்ந்த அலி ரோஜர்ஸ் இரண்டாம் இடத்தையும் ஆக்லஹோமாவை சேர்ந்த அலிசியா கிளிப்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (அ-5)

## தொடர் குண்டு வெடிப்பால் மாநில முதலமைச்சர் பதவி நீக்கம்

பாகிஸ்தானின் பாலொகிஸ்தான் மாநில முதலமைச்சர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மாநிலத்தின் தலைநகர் குவாட்டாவில் அண்மையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் பிரதமரால் மாநில முதலமைச்சர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஷியா முஸ்லிம்கள் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் 92 பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். (அ-5)

# 22 பஞ்சாயத்து உறுப்பினர்கள் உயிர் அச்சுறுத்தலால் பதவி விலகல்

## ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் பரபரப்பு

ஜம்மு-காஷ்மீரில் இயங்கி வரும் தீவிரவாத குழுக்கள் மக்களாட்சி தத்துவத்தை சீர்குலைக்கும் வகையில் பஞ்சாயத்து தலைவர்கள், ஆலோசகர்கள் ஆகியோரை சுட்டுக் கொன்று அச்சுறுத்தி வருகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படாமல் இருந்த ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் முதன்முறையாக கடந்த 2011ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டன. 80 சதவீதம் வாக்குப்பதிவுடன் வெற்றிகரமாக நடைபெற்ற இந்த தேர்தல்களின் மூலம் 33 ஆயிரம் உள்ளூராட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தேடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள், ஆலோசகர்கள் ஆகியோரை இராஜினாமா செய்துவிடும்படி தீவரவாதிகள் மிரட்டுவதோடு மிரட்டலுக்கு அடிபணியாத பலரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த மாதம் தெற்கு காஷ்மீரில் உள்ள புல்மாவா மாவட்டத்தைச் சேர்ந்த முஹம்மது ஷபிதர் என்ற பஞ்சாயத்து தலைவரை கடத்திச் சென்ற தீவிரவாதிகள் அவரை சுட்டுக்கொன்று உடலை ஊர் எல்லையில் வீசிவிட்டு சென்றனர்.

இரு தினங்களுக்கு முன் சுரிபூரா கிராம பஞ்சாயத்து தலைவர் ஹபீபுல்லா மிர் மீது அங்கு வந்த 3 தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். தொண்டையில் குண்டு பாய்ந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

இதேவேளை ஹர்ட்ஷிவா கிராமத்தைச் சேர்ந்த பெண் பஞ்சாயத்து தலைவர் ஸீனா பேகம் (30) என்பவரை தீவிரவாதிகள் நேற்று முன்தினம் துப்பாக்கியால் சுட்டனர்.

கழுத்தில் குண்டு பாய்ந்த நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் ரீநகர் பாரமுல்லா மாவட்டத்தைச் சேர்ந்த 22 பஞ்சாயத்து உறுப்பினர்கள் தங்களது பதவிகளை நேற்று இராஜினாமா செய்தனர். உயிர் பயத்தால் எங்கள் பதவிகளை இராஜினாமா செய்கின்றோம் என்று ஹர்ட்ஷிவா பஞ்சாயத்து தலைவர் மன்சூர் அஹமத் ராதர் என்பவர் நிருபர்களிடம் கூறினார். (அ-5)

# உயிருக்கு போராடுகிறார் வெனிசுலா ஜனாதிபதி

வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் உயிருக்கு போராடி வருவதாக முன்னாள் துணை ஜனாதிபதி எலியாஸ் ஜாவ்வா தெரிவித்துள்ளார்.

புற்றுநோயால் அவதிப்பட்டு வரும் வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் (வயது 58) தற்போது கியூபாவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அங்குள்ள ஹவானா மருத்துவமனையில் அவருக்கு கடந்த டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி அறுவைச் சிகிச்சை நடந்தது. சுமார் ஒருமாத காலம் ஆகியும் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கின்றது.

இந்நிலையில் சாவேஸ் உயிருக்கு போராடி வருவதாக முன்னாள் துணை ஜனாதிபதி எலியாஸ் ஜாவ்வா தெரிவித்துள்ளார்.

இவர் கூறுகையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சாவேஸ் உடல்நலம் தேறினார். இந்நிலையில் மீண்டும் உடல்நிலை மோசமாகி கியூபா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து உயிருக்கு போராடி வருகிறார் என தெரிவித்துள்ளார். (அ-5)

# தம்பியைக் காப்பாற்ற தீக்குள் புகுந்த வீரச்சிறுவன்

டொரொண்ட்டோவில் தனது ஓர் அறையில் தீப்பிடித்ததைப் பார்த்ததும் நிக்கோலஸ் டிஷேன் என்ற 12 வயதுச் சிறுவன் தன் தந்தையிடம் தெரிவித்துவிட்டு உள்ளே ஓடிச்சென்று 6 வயதான தன் தம்பி வின்சென்ட்டைக் காப்பாற்றியுள்ளார்.



மீண்டும் உள்ளே ஓடிச்சென்று தன் அருமை நாய் சிம்பாவைக் காப்பாற்ற ஓடினான். ஆனால் புகை அதிகமானதால் உள்ளே நுழைய முடியவில்லை.

டொரொண்ட்டோவின் தீயணைப்புப் படைவீரர்கள் சங்கம் டிஷேனைப் பாராட்டி மகிழ்ந்ததுடன் அவனது குடும்பத்துக்கு 500 டொலர் காசோலை வழங்கப்பட்டது.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பை நிறைய பொம்மைகள் வழங்கப்பட்டன. டிஷேனை உண்மையான வீரன் என்று பொலிஸ் அதிகாரி பாராட்டிப் பேசினார். (அ-5)

## தமிழகத்தில் ஆயிரம் சிற்றுண்டி உணவகங்கள்

• ஏழை மற்றும் கூலித்தொழிலாளர்கள் வசதிக்காக சென்னை முழுவதும் ஆயிரம் சிற்றுண்டி உணவகங்களை திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்

இது தொடர்பாக இன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சென்னை நகரில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் ஒரு சிற்றுண்டி உணவகம் என்ற அடிப்படையில் 200 சிற்றுண்டி உணவகங்களை தொடங்க முதல்வர் ஒப்புதல் அளித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகங்களில் இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும் சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும் தயிர்சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவிலேயே ஊழல்கள் அதிகம்

## ஜாக்கிஜான் சீற்றம்

சமீபகாலமாக அமெரிக்க பத்திரிகைகள் சீனாவையும் அதன் தலைவர்களையும் இகழ்ந்து செய்திகள் வெளியிட்டு வருகின்றன.

சீனாவில் ஊழல் மலிந்துவிட்டது. அந்த நாட்டின் பிரதமர் வென் ஜியாவோ உள்ளிட்ட தலைவர்கள் ஊழல் மூலம் சொத்துக்களை குவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடிகர் ஜாக்கி ஜான் சீனாவின் போனிக்ஸ் தொலைக்காட்சி சேவைக்கு பேட்டியளித்துள்ளார்.

உலகிலேயே ஊழல் மலிந்த நாடு அமெரிக்காதான். சீனா அல்ல. இங்கும் ஊழல் பிரச்சினை உள்ளது. அதை ஏற்று கொள்கிறேன். அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது சீனாவில் குறைவு தான் என்றார்.

மேலும் அவர் கூறும்போது, சீனர்கள் தங்களை மட்டுமே விமர்சனம் செய்வார்களே தவிர வெளிநாடுகளை அல்ல. இந்த வகையில் எங்கள் நாடு மிக சிறந்தது என்று கூறினார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும், செய்கின்ற தீ வினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டாது.
-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாங்கள் பிழைவிட்டுவிட்டோம் என்று சிங்கள மக்கள் விரைவில் உணர்வார்கள்

ஆணவம் கன்மவினையை ஏற்படுத்துகின்றது என உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறிய விடயம் ஈன்று சிந்திப்பதற்குரியது.

இதன் காரணமாகவே ஆண்வம் கொண்டோர் அழிவைச் சந்திக்கின்றனர் என்ற அவரின் உரை விளக்கம் மிகவும் யதார்த்தமானது. இஃது இலங்கைக்கு மிகவும் பொருத்துடையதும்கூட.

இலங்கை நாட்டின் சமகாலப்போக்கை ஒருக்கணம் சிந்தித்தால், இங்கு என்னதான் நடக்கிறது என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு ஜனநாயகப் பண்புகள் புதைக்கப்படுகின்றன.

நாட்டின் பிரதம நீதியரசர் விடயத்தில் இலங்கையின் அரசியலமைப்பு செயற்பட்ட விதம், இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் அமைப்பின் தெளிவின்மையை அல்லது தனி மனிதனுக்கு அது வழங்கியுள்ள அதிகாரக் குவிப்பை சுட்டி நிற்கின்றது.

அரசியல் அமைப்புக்கள் எப்போதும் தெளிவானவையாக, முரண்பாடற்றவையாக, குழப்பத்தை நீக்குபவையாக இருக்க வேண்டும்.

ஆனால், பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி விலக்கியதிலிருந்து அரசியல் அமைப்பு ஏதோவொரு வகையில் சார்புபட்டு செயற்படுத்தக் கூடியதாக இருக்கின்றதென்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

இது ஒருபுறத்திலிருக்க, தமிழர்களின் விடயத்தில் பராளுமன்றமும், நீதிமன்றமும் இணைந்து நின்று எதிராக சாதித்தவற்றின் வினைப்பயனாக இப்போது பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறிக்கொள்வதற்கு ஓய்வு பெற்ற நீதியரசரின் மேற்போந்த கருத்தியலை எடுத்துக் கொள்ள முடியும்.

அந்த வகையில், நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்நிலை தென்பகுதியில், அரசு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதன்விளைவாக, இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதற்கப்பால் இலங்கையில் ஜனநாயகம் கேள்விக்குரியதாகி விட்டுள்ளது என்பதை தென்பகுதி மக்கள் விரைவில் உணர்ந்து கொள்வர்.

எவ்வளவுதான் விஞ்ஞானம் வளர்ச்சி கண்டாலும் எவ்வளவுதான் இராஜதந்திரம் பிரயோகிக்கப்பட்டாலும் அறம் இல்லாத செயல்கள் நிச்சயம் கன்மவினைக்குட்பட்டு உள்ளதையும் இழக்கின்ற துன்பத்தை தரும் என்ற உண்மை நிரூபணமாகும் வாய்ப்பு இந்த நாட்டில் விரைவில் ஏற்படலாம்.

மிக நீண்டகாலமாக தமிழ் மக்கள் இந்த நாட்டில் படுகின்ற துன்பங்கள் கொஞ்சமல்ல.

இந்தத் துன்பங்கள் பற்றி இம்மியும் கருத்தில் கொள்ளாமல் தமிழர்களை-அவர்களின் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விட்டோம் என்று புளகாங்கிதம் கொள்கின்ற சிங்கள மக்களும், அவர்களின் தலைமைகளும் நிச்சயம் ஒரு விடயத்தை உணர்ந்து கொள்வார்கள்.

அது,தமிழர்களுக்கு நாங்கள் பிழை செய்து விட்டோம் என்பதாக இருக்கும்.

# குற்றவியல் பிரேரணை விவாதத்தில் மௌனம்காத்தார் ரணில் விக்கிரமசிங்க

## சிங்கள ஊடகம் சாடல்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதனை ஓர் உலக சாதனையாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவாதத்தின் போது எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எவ்விதக் கருத்துக்களையும் வெளியிடவில்லை.

ஆளும் கட்சியில் அங்கம் வகித்த சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளப்போவதில்லை எனபகிரங்கமாக அறிவித்திருந்தனர்.

எனினும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்து எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இரகசிய இணக்கப்பாட்டுக்கு அமைய ரணில் கருத்து வெளியிடவில்லை என பலர் குற்றம் சுமத்திவருவதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த இருபது-20 உலகக்கிண்ண இறுதிப் போட்டியின் போது ரணில் விக்கிரமசிங்க, பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தார் என மவ்பிம எனும் சிங்கள ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது. (எ-11)

# புனர்வாழ்வு முடிந்ததும் கல்வியை தொடரலாம்

## கைதான மாணவர் குறித்து ஹத்துருசிங்க விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வெலிகந்த புனர்வாழ்வு முகாமில் தற்போது புனர்வாழ்வு பெற்றுவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேரும் புனர்வாழ்வுக் காலம் முடிந்த பின்னர் பல்கலைக்கழகத்தில் அவர்களது கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுவார்கள் என யாழ். மாவட்ட இராணுவகட்டளைத் தளபதிமேஜர்ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனாலும் மாணவர்கள் விடுதலையாகும் கால எல்லை குறித்து கூற முடியாது எனத் தெரிவித்த ஹத்துருசிங்க, இது மாணவர்களின் நடவடிக்கையைப் பொறுத்தே அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கானஅனைத்து அடிப்படை வசதிகளும் அவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிகந்த புனர்வாழ்வு முகாமில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

த நேசன் இணையத்தளத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிய செவ்வி ஒன்றிலேயே மேற்குறித்த விடயங்களை யாழ். படைத்தளபதி ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். அந்த ஊடகத்துக்கு இது தொடர்பில் மேலும் தகவல் தெரிவித்துள்ள அவர்,

பொலிஸாருடன் இடம்பெற்ற மோதல்களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டு கடந்த ஒருவாரத்துக்கு முன்னரே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

பல்கலைக்கழக அதிகாரபூர்வ தகவல்களின்படி 90 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகம் மீளத் திறக்கப்பட்ட பின்னர் தமது கல்விச் செயற்பாடுகளுக்காக திரும்பியுள்ளனர்.

புனர்வாழ்வு பெற்றுவரும் மாணவர்கள் தொடர்பாக எந்த உறுதிமொழிகளும் பல்கலைக்கழக அதிகாரபூர்வ தரப்பால் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. புனர்வாழ்வு பெற்றுவரும் மாணவர்களின் நடவடிக்கைகள் மற்றும் சிந்தனைகளில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தே அவர்கள் விடுவிக்கப்படும் காலம் தீர்மானிக்கப்படும்.

புனர்வாழ்வுக்கான காலத்தை மாணவர்களின் நடத்தைகளைப் பொறுத்து புனர்வாழ்வு முகாமுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரியே தீர்மானிப்பார் எனவும் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் மட்டுமே தம்முடைய ஒரே தலைவர் என்ற சிந்தனை கைதாகியுள்ள 4 மாணவர்களிடமும் இருந்தது. ஆனால் தற்போது அவர்களுடைய சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டுவருகிறது எனவும் ஹத் துருசிங்க மேலும் கூறியுள்ளார். (எ-11)

## மேர்வினை அமைப்பாளராக்க களனியில் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

மேர்வின் சில்வாவை களனித் தொகுதியின் அமைப்பாளராக மீண்டும் நியமிக்கும்படி ஜனாதிபதிக்கு வலியுறுத்தி கையெழுத்து வேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுறது.

களனிப் பிரதேசத்தை சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் இணைந்து அப்பகுதியில் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேர்வின் சில்வா நல்லவர் என்பதுடன் மிகவும் திறமையானவர். எனவே அவரை உடனடியாக அப்பதவிக்கு நியமிக்கும்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களனிப் பிரதேசத்திற்கான பெண்கள் பிரிவின் தலைவி தமயந்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் எப்போதும் பௌத்த தர்மத்தின் நற்சிந்தனைகளுடனே எமக்கு அறிவுரை கூறுபவர் எனவும் அவர் கொலைகாரர் அல்லர் எனவும் தமயந்தி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

களனிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இக்கையெழுத்து வேட்டை இடம்பெற்றுவருவதாகவும், இதில் ஏற்கெனவே நூற்றுக்கணக்கானோர் கையெழுத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## ரயில்கள் மோதி விபத்து ஐவர் காயம்!

(கொழும்பு)

அம்பேபுஸ்ஸ ரயில் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற ரயில் விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயிலுடன் மற்றொரு ரயில் மோதுண்டதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அம்பேபுஸ்ஸரயில்நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலுடன் மீரிகமவிலிருந்து சென்ற ரயில் மோதிவிபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் சம்டவத்தில் காயமடைந்த ஐவரும் சிறு காயங்களுக்கே உள்ளாகியுள்ளதாகரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (எ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உண்மையைப் பின்பற்றுங்கள்!



இதயம் விரிவடைந்தால்தான் உண்மை ஞானம் உதிக்கும். உண்மைஞானம் மலர்ந்தால் மனதில் நம்பிக்கை நிலைக்கும்.

பொன், பொருளில் ஆசை கொண்டு அற்ப வாழ்க்கை நடத்துபவர்கள் பொருட்படுத்தக்கூடியவர்கள் அல்ல.

யாருடைய நெஞ்சம் ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவரே மகாத்மா.

கோழைகளே பாவச் செயல்களைச் செய்வர். தைரியத் கொண்ட மனிதர்கள் ஒருக்காலும் பாவம் புரிய நேர்வதில்லை.

வஞ்சனையால் பெரிய விடயம் எதையும் வாழ்வில் சாதித்து விடமுடியாது.

அறிவைப் பலவீனப்படுத்தும் எந்தவிடயமாக இருந்தாலும் அதை விசம் எனக்கருதி ஒதுக்குங்கள்.

உண்மை உங்களை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப்பின்பற்றிச் செல்லுங்கள். ஒருபோதும் கோழையாகவோ கடபதாரியாகவோ இருக்காதீர்கள்.

நிச்சயமாக நன்மை விளையும் என்று உணர்ந்தால் மட்டுமே மனதில் இருப்பதை வெளிப்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்று கூறுகிறார் இரண்டாம் வருட பல்கலைக்கழக மாணவன்


கடந்த 11.01.2013 அன்று இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் சுமார் 10.30 மணியளவில் மாணவர்கள் ஒன்று கூடினர்.

680 மாணவர்களுக்கு மேல் இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆவர். நான் ஒரு பல்கலைக்கழக மாணவன். என்னைப் போன்று பல மாணவர்கள் அங்கு கல்வி கற்கின்றார்கள். பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறியவர்கள், வைத்திய கலாநிதிகள் மற்றும் அரசாங்க ஊழியர்கள், A/L, O/L கற்கும் மாணவர்கள் எல்லாமாக சுமார் 680 மாணவர்கள் முற்றிலும் இலவசமாக கல்வி கற்கின்றனர். இக்கல்வி கற்கும் மாணவர்கள் அங்கே கற்பிக்கும் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் தமது சிங்கள, மொழி வல்லமையை வடமாகாண ஆளுநருக்கு முன்னால் காட்டினார்கள். அந்த மேடையில் முற்றிலும் தமிழிலும் சிங்களத்திலும் அங்குள்ள மாணவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். அங்கு சொற்பொழிவு ஆற்றிய சிங்கள மொழி விரிவுரையாளர், சிங்கள மொழியை தாய்மொழியாகக் கொண்ட திருமதி.லிலானி அமரசிங்க தேசிய இரண்டாவது மொழியியல் கல்லூரியின் நோக்கமும் இலக்கும் பற்றி சொற்பொழிவாற்றினார். அதிலே இதுவரை ஏறத்தாழ 3000 மாணவர்களை திரு.எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் தனது சொந்த நிதியில் இருந்து கற்பித்துக்கொண்டிருக்கின்றார் எனக் கூறியபோதுதான் மாணவராகிய எமக்குத் தெரியும். மாதம் ஒன்றுக்கு 2 இலட்சத்துக்கு மேல் செலவுசெய்து 2000 இற்கு மேற்பட்ட மாணவர்களை தற்பித்து வடபகுதியில் அவர் செய்யும் சேவை தூரநோக்கு சிந்தனை என்றால் மிகையாகாது. மிக அண்மைக் காலத்தில் ஜனாதிபதியிடமிருந்து தேசமான்ய விருதுபெற்ற திரு.எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் ஐரோப்பாவில் சிறந்த ஒரு சட்ட ஆலோசகர், சிறந்த மொழியியல் கல்விமான் என்பதை நான் பத்திரிகை ஊடாக தெரிந்துவைத்திருந்தபோதும் தூரநோக்குச் சிந்தனையாளர் என்பதை ஒரு சிங்கள விரிவுரையாளர் சொல்லும்போது தான் நான் அறிந்துகொண்டேன்.

வடக்கிற்கும் தெற்குக்கும் மொழி ஒரு பிரச்சினையாக இருந்தால் அவர் எடுக்கும் இந்த முயற்சி இந்த நேரத்தில் இலங்கையில் என்னைப்போன்ற மாணவருக்கு மகத்தான சேவை ஆகும். மேலும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தனது பிரதம விருந்தினர் உரையில் மெச்சியும் பாராட்டியும் பேசியபொழுது அன்று அவரது பிறந்த நாளை மேடையில் மாணவர்கள் சகிதம் கொண்டாடப்பட்டதும் மாணவராகிய நாம் மாற்றுமொழி, மாற்று மதம், பிறமொழி பேசும் மற்ற மனிதர்களுக்கு மதிப்பளித்து எப்படி வாழ்வது என்பதற்கு தனது 31 வருட ஐரோப்பிய வாழ்க்கையில் தான் கண்ட அனுபவத்தினூடாக வடபகுதி மாணவர்களுக்கு வடிவமைத்துக் கொடுத்திருக்கின்றார் என்றால் மிகையாகாது.

நான் ஒரு பல்கலைக்கழக மாணவனாக இருந்தும் சிங்கள மொழியைக் கற்றுக் கொண்டிருக்கின்றேன். காரணம் எதிர்காலத்தில் வெளிமாவட்டங்களிலும் ஆங்கில மொழியைக் கற்றால் வெளிநாடுகளிலும் பணியாற்றவேண்டும் என்பது எனது இலக்கு. இதை யாராலும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல அக்கல்வி நிலையத்தின் மாணவன் என்ற நிலையில் அன்று கல்வியியற் கல்லூரியில் நடந்த விழாவை பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். அந்த மண்டபத்தில் மாணவர்களின் அமைதியைப் பார்த்து அந்த விடயத்திற்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பை பார்த்து அங்குள்ள மாணவர்கள் தமது கரகோசம் மூலம் இவ்வாறான சமூக சேவைக்கு பதிலளித்தமையையும் என்னால் காண முடிந்தது. இந்த வகையில் இப்படிப்பட்ட சமூக சேவைகள் பல நிறுவனங்கள் மேற்கொண்டாலும் திரு.எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் அவர்களது சமூகசேவை மாணவர்களாகிய எம்மால் மறக்கமுடியாது என்று கூறி அந்த நேரத்தில் இந்து பௌத்த கலாசார பேரவை தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தினதேரர் அவர்கட்கும் இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளரும, ஐரோப்பிய நாடொன்றின் சட்ட ஆலோசகரும் இனிமையும் எளிமையும் நிறைந்த தேசமான்ய திரு.எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் மாணவராகிய எமக்கு எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது மிகையாகாது என்று சொல்லுகிறார் யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவன் [illegible]

([illegible])




ஆளுநர் வரவேற்பு....



பாண்ட் வாத்தியத்துடன் ஆளுநர் வரவேற்பு....



வடமாகாண ஆளுநர் பிறந்த நாள் கொண்டாடியபோது



ஆளுநர் சிறப்புரையாற்றும்போது...



கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி
# ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார், காமாட்சி வி.க.வெற்றி

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் பொங்கலை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 5 பேர் 6 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டி ஒன்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இவ்அரையிறுதிப் போட்டியில் ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் அணியை எதிர்த்து உரும்பிராய் கலைவாணி அணி மோதியது. இதில் ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் கலைவாணி வி.க நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

கலைவாணி விளையாட்டுக்கழகம் சார்பில் கஜீபராஜ் மூன்று நான்குகள் ஒரு ஆறு உட்பட 34 ஓட்டங்களையும், சயந்தன் இரண்டு ஆறுகள் உட்பட 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் லெவின் ஸ்ரார் அணியின் தீபன் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

62 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய லெவின் ஸ்ரார் வி.க 3.3 பந்து பரிமாற்றங்களில் 1 இலக்கை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கஜேந்திரா நான்கு ஆறு, ஒரு நான்கு உட்பட 33 ஓட்டங்களையும், தீபன் இரண்டு ஆறுகளுட்பட 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

மற்றொரு அரையிறுதிப்போட்டியில் காமாச்சி ஏ அணியை அராலி சரஸ்வதி வி.க எதிர் கொண்டது.நாணய சுழற்சியில்வென்ற காமாட்சி விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பாடியது.

இதன்படி முதலில் துடுப்பாடிய அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 83 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் சார்பில் முரளி நான்கு ஆறுகள் உட்பட 25 ஓட்டங்களையும் றொசான் நான்கு ஆறுகள் உட்பட 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் காமட்சி வி.க செல்ரன், நிசாந் தலா 1 இலக்கினை கைப்பற்றினர்.

84 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய காமட்சி வி.க ஒரு இலக்கை மாத்திரமே இழந்து 3.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் காமாட்சி சார்பாக ரம்மியாகுலன் ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களையும் கிருபவன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். (23)



இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து விளையாட்டு உபகரணங்களை வழங்குவதை படத்தில் காணலாம். (23)

# போட்டிநிரல் தயாரிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2013-ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நிரல் தாயரிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்கிழமை 10 மணிக்கு வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பிரதம நீதியரசராக...

நீதியரசர் பதவிக்கு தகுதியானவர்கள் என மெஹான் பீரிஸ் உட்பட்ட மூவரது பெயர்கள் நாடாளுமன்ற பேரவையிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகளில் நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் ஒருவரை மாத்திரமே பரிந்துரைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற சபையின் உறுப்பினர்கள் தெரிவித்தமையை அடுத்து மெஹான் பீரிஸின் பெயர் மாத்திரம் சபையின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் இன்று சத்தியபிரமாணம் செய்துகொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொஹான் பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை சபையில் கடந்த வருடம் பிரதிநிதியாக பங்கேற்று அங்கு வெளியிட்ட கருத்துக்கள் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தன.

இலங்கையின் காணாமல்போனதாக கூறப்பட்ட பலர் வெளிநாடுகளில் தஞ்சம் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார். எனினும் பின்னர் அதனை அவர் மறுத்திருந்தார். (எ-11)

## பிரதம நீதியரசர்...

செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியல்யாப்பில் புதிய சட்டமூலங்களை உருவாக்குதல் மற்றும் சட்டங்களைத் திருத்துவதற்கான பூரண அதிகாரத்தை பாராளுமன்றமே கொண்டிருக்கிறது என்று கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் தீர்மானத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். இப்போது புதிய பிரதம நீதியரசரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

அரசியல்யாப்பு சாசனத்தில் 109 முதலாம் சரத்தின்படி பதில் நீதியரசர் ஒருவரை நியமிக்கலாம் அல்லது 107வது விதப்புரையின் படி நிரந்தர பிரதம நீதியரசரை நியமிக்ககூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்று கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா மேலும் தெரிவித்தார். (எ-11)

# கோப்பாய் சென்.மேரிஸை வீழ்த்தி அளவெட்டி மத்திய வி.க சம்பியன்

(உரும்பிராய்)



உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் 36 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியன் ஆகியுள்ளது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இவ்இறுதிப் போட்டியில் கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் 12 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களினை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரஹீம் 13, பார்த்தீபன் 11 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் சென்.மேரிஸ் அணி சார்பாக அன்ரன் 3 விக்கெட்டுக்களையும், சுபாஸ், டியூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

67 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 8 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.



துடுப்பாட்டத்தில் புனிதன் 10 ஓட்டங்களினைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி சார்பாக சுதன், விஷ்ணு ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தின் ரஹிமும் போட்டித் தொடரின் நாயகனாக அவ்வணியின் தயாளனும் தெரிவு செய்யப்பட்டனர்.


# மரண அறிவித்தல்

## இராசையா ஆறுமுகம்

(இளைப்பாறிய மருந்தாளர்)



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஆறுமுகம் 13.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் -செல்லம்மா தம்பதியரின் மருமகனும்,

குணமணிதேவியின்(முன்னாள் தலைவர், செயலாளர்- நகரசபை, சாவகச்சேரி) அன்புக் கணவரும்,சஞ்சீவன் (கனடா), மஞ்ஜீவன் (ஆராய்ச்சி உதவியாளர்-IFS) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சொரூபினியின்(கனடா) அருமை மாமனும் பழனிப்பிள்ளையின்(கனடா) சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.01.2013 புதன்கிழமை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மாசிவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ம் கட்டை இராசவீதி;
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
T.P.: 021 321 4894, 0771962054

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(1495)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலநிலை மாற்றத்தால் வடக்கும் பாதிப்பு

காலநிலை மாற்றத்தினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய நாட்டின் பல பிரதேசங்கள் இனம்காணப் பட்டுள்ளன.

இதன்படி வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களும்,அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களும் கூடுதல் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளதென பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பி.வி.ஆர்.புண்ணியவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாதிப்புக்கள் தெடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று ஆராயவுள்ளது.

விவசாய, சுகாதார, சுற்றாடல், எரிசக்தி போன்ற பல்வேறு துறைகள் ஊடாக கால நிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முறைகள் கண்டறியப்படுமென கலாநிதி புண்ணியவர்தன குறிப்பிட்டார். (எ -11)

## பதவி விலக...

மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தில் ஷிராணி பண்டாரநாயக்க நீதியரசர் குழுத் தலைவராக வழக்கு விசாரணைகளின்போது சமுகமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இன்று 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளில் சமுமளிக்கவுள்ளதாக பதியப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் பதவியில் இருந்து ஷிராணி பண்டாரநாயக்கவை நீக்குவதற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையை அடுத்து பிரதம நீதியரசரின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ -11)


### தேவை

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுவரும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு அதன் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்குடன் யாழ் நகரத்தை அண்டிய பிரதேசத்தில் காரியாலயத் தேவைகளுக்காக வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய சிறிய வீடு ஒன்று நீண்டகால அடிப்படையில் எங்களால் எதிர்பாரக்கப்படுகின்றது மேலதிக விபரங்களுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொ.பே: 0772104550**


## புதிய நீதியரசர் நியமனத்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ண, புதிய தலைமை நீதிபதி ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு சட்டரீதியான அதிகாரங்கள் இல்லை என்று குறிப்பிட்டார்.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக மேற்கெள்ளப்பட்ட கண்டண பதவிநீக்க நடைமுறை சட்டவிரேதமானது என்று உயர் நீதிமன்றம் முடிபு தெரிவித்துள்ள நிலையில், அத்தீர்ப்பை மதிக்காது புதிய பிரதம நீதியரசர் ஒருவரை ஜனாதிபதி நியமித்தால் அது சட்டப்படி செல்லாது என்பது சட்டத்தரணி சங்கத்தினரின் வாதம்.

ஜனாதிபதி செய்யக்கூடிய நியமத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

அரசியல்யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராகத்தான் வழக்குத்தாக்கல் செய்ய முடியாதேயொழிய ஜனாதிபதி செய்கின்ற சட்ட விரோதமான நியமனங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய முடியும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ண விளக்கம் அளித்துள்ளார்.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்குவதற்கான அறிவித்தலை மீளப்பெறுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ள சட்டத்தரணிகளின் கூட்டிணைப்பு, அரசியலமைப்பிற்கு முரணாக சட்டவிரோதமாக நியமிக்கப்படும் புதிய பிரதம நீதியரசருக்கு எதிராக ரிட் ஆணை பெற்றுக்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது.

குற்றப்பிரேரணை மற்றும்அதன் செயன்முறை தொடர்பில் உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அறிவிப்புக்களை வழங்கியிருந்தன. எனினும் குற்றப் பிரேரணை நடவடிக்கை அரசியலமைப்பிற்கு முரணாகவே முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் கீழ் பிரதம நீதியரசரை சட்ட விரோதமாக நீக்கிவிட்டு புதிய நீதியரசரை நியமிப்பது சட்ட விரோதமானதாகும்.

அந்த நியமனத்தை வழங்கும் நடவடிக்கையானது சட்டவிரோதமானதாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்டவரே இவ்வாறான சட்டவிரோதமான நியமத்தை வழங்கி வைக்கின்றார்.

சட்டவிரோதமான நியமனத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்ய முடியும். இன்றேல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் ஆணையை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவித்தனர்.

நீதித்துறை சுயாதீனமாவே இயங்க வேண்டும். அதன் செயற்பாடுகளில் நிறை வேற்றுத் துறை தலையிடும் வகையில் சட்டத் துறையும் நிறைவேற்று துறையின் கீழ் அடி பணிந்தால் மக்களுக்கு நீதிமன்றங்களில் இருந்து எவ்விதமான நிவாரணமும் கிடைக்காது என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்தார்.

சட்டத்துறையை பாதுகாப்பதற்காக நாம் இவ்வளவு நாளாகவும் போராடிக் கொண்டிருந்தோம். எதிர்வரும் காலங்களில் இந்த போராட்டத்தை மாற்றுவடிவத்தில் முன்னெடுக்கப் போகிறோம்.

இந்த போராட்டத்தில் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும்.நீதித்துறையானது நிறைவேற்றுத்துறையின் கீழ் அடிபணிந்து விட்டால் மக்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்காது.

இவ்வாறனதொருநிலைஏற்பட்டுவிட்டால் நீதிவான் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பைக் கூட மாற்றி எழுதும் அளவிற்கு பிரதேச அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகாரங்களை கையில் எடுத்துக்கொள்வர். இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அதுநாட்டு மக்களுக்கே ஆபத்தாக மாறிவிடும் என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவிக்கையில்,

அரசியல்அமைப்பிற்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் 117பேர் குற்றப் பிரேரணையில் கைச்சாத்திடுள்ளனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

தீர்ப்புகளை வழங்கிய நீதியரசர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.ரிஷானாவுக்கு உலகத்தில் நீதி கிடைக்கவில்லை.அதேபோல இலங்கையின்நான்காவதுபிரஜையானஷிராணி பண்டாரநாயக்கவுக்கும் நீதி கிடைக்கவில்லை என்றார்.(எ-11)

## பொலிஸ் ஜீப்...

ஏ-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து பரந்தன் நோக்கி துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த இருவரை பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலிஸ் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் ஆறுமுகம் கணேஷ் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார். செல்லையா (வயது 78) என்பவர் காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நடைபெறுவதற்கு முன்னர் பரந்தன் சந்தியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் எதிரே வந்து தரிப்பிடத்தில் நின்ற பேருந்துடன் மோதிக் கொண்டதில் ஒருவர் படு காயங்களுக்கு உள்ளாகியதுடன் மற்றையவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

அதனை அடுத்து படுகாயமடைந்தவர் முச்சக்கர வண்டி மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அதனையடுத்து அங்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தியதுடன் மோட்டார் சைக்களில் வந்தவர்கள் மதுபோதையிலேயே வந்திருந்தமை தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்திருந்த மற்றையவரை ஏற்றிக்கொண்டு பொலிஸ் வாகனம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது முன்னால் சென்றுகொண்டிருக்கும் வாகனம் ஒன்றினை முந்திச்செல்ல முற்பட்டபோதே முன்பாக துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்தவர்களை மோதித்தள்ளியதுடன், வீதியை விட்டு விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்து தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைக்களை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3,11,259)

## பொதுநலவாய...

அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா வைத்திலிங்கம்

(உரிமையாளர் - நவசக்தி உணவகம் கிளிநொச்சி)



**பிறப்பு: 08 • 12 • 1942**

**இறப்பு: 10 • 01 • 2013**

கடந்த 10.01.2013ஆம் திகதியன்று வியாழக்கிழமை குவைத்தில் இறைபதம் அடைந்த அன்னாரது இறுதிக் கிரியைகள் இலக்கம் 55, கச்சேரியடி கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் 16.01.2013 புதன்கிழமை காலை இடம்பெற்று அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.55, கச்சேரியடி, கிளிநொச்சி.** **தகவல்: குடும்பத்தினர்**

(அ-2121)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org